806

உ

சிவமயம்.

2925

நாரதர் புராணத்தில் ஓர்பாகமாகிய

தமயந்தி
நாரதர் கலியாண
நாடகம்.

18 NOV 1937

சி. வே. மீனாக்ஷிசுந்தர முதலியார்
அவர்களாற்றமது

சென்னை-சூளை,
"பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்திற்"
பதிப்பிக்கப் பட்டது.

1937.

விலை] ரிஜிஸ்டர்காபிரைட். [அணா 5

உ

சிவமயம்.

நாரதர் புராணத்தில் ஓர்பாகமாகிய

தமயந்தி
நாரதர் கலியாண
நாடகம்.

கூடலூர் தாலுக்கா வேலுடையாம்பட்டு போஸ்டு,
ஷை கிராமத்தில் இருக்கும் பு. வீரப்ப உபாத்தியாயர்
மாணாக்கரில் ஒருவராகிய
சிதம்பர ஆசாரிகுமாரன்,
சாமிக்கண்ணு ஆச்சாரி அவர்களால்
இயற்றியதை,

சித்துக்காடு,
வே. மீனாக்ஷிசுந்தர முதலியார்
அவர்களாற்றமது
சென்னை-சூளை,
"பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்திற்"
பதிப்பிக்கப் பட்டது.

1937.

விலை] ரிஜிஸ்டர்காபிரைட். [அணா 5

OFFICE OF THE REGISTRAR
18 NOV 193
894.8112

உ

சிவமயம்.

நாரதர் புராணத்தில் ஓர்பாகமாகிய

தமையந்தி

நாரதர் கலியாண

நாடகம்.

வினாயகர் துதி.

ஆதியாய்யனாதியாகி அண்டபிண்டங்களாகி
சோதியாய்எங்கும்தோன்றும் சுடரொளிவிளக்காய்நின்ற
பாதிமதியணிந்தோன்பாலா பணிந்திட்டேன்சிறுவன்யானும்
வீதியில்நின்றுலாவும் வினாயகாபோற்றிபோற்றி.

தேவேந்திரன் கவி.

தங்கமாமகுடம்பூண்டு தரித்திடும்பணிகளாட
நங்கையூர்வசிரம்பை நாட்டியம் ஆடிப்பாட
திங்கள்போல்ஒளிசிங்காரன் தீரஒய்யாரமாரன்
இங்கீர்தகுணசிங்காரன் இந்திரன்வருகின்றானே.

தேவேந்திரன் தரு.

அண்டர்தேவர்யாவருக்கும் அரசனாகவேவந்தேன்
வச்சிரபாணிவந்தேன்தேவர்கள்சூழ வச்சிரபாணிவந்தேன்
தண்டமுரசுபேரி அண்டம்கிடுகிடென்ன
தவரிஷிகளெல்லாம் தளபதியென்றுபன்ன
சுரு தாளதம்புரு வீணைமுழங்கிட
மேளசத்தங்கள் ஒத்துகலங்கிட அண்
சிரசினில்மணிமுடி செகசோதியாய்துன்ன
தீரன்கொலுவதாகினேன் வெகுவேடிக்கையாகதீரன்கொலுவை
அரம்பையூர்வசிமாதர் அருவைநாட்டியமாட
அசுவனிதேவர்களும் அடியிணைகண்டுநாட

சுரு அந்தனர்கூடியே வேதங்கள்பேசிட
கந்தணிமாதர்கள் கவுரிகள்வீசிட அண்
கர்ப்பகத்தருவாசன் இஷ்ட்டபணிஉல்லாசன்
கரியின் மீதினில்ஏரியே இந்திரதேவன் கரி
சர்ப்பவிஷத்தை தயுண்ட சங்கரன்பாதம்போற்றி
சரணர்கள்பிருபுரம் தயவாளன்னடிபோற்றி
சுரு சந்தனபுனுகு சவ்வாதுகள்வீசிட
செந்தாமலர்வாடை கண்களும்கூசிட அண்
இன்றையதினத்தில் நின்றுதேவசபையில்
கன்னல்மாரன்போல வந்தனேகொலுவைநாடி கன்
பொன்னுலகம்மென்றல் புத்திசித்தியும்உண்டு
சுரு சந்திரனோவென இந்திரனோவென்ன
பந்திபந்தியாய் துதித்திடவேமுன்னே அண்

தேவேந்திரன் தேவாரம்.

அருமறைவேதநான்கு மறிந்திடுமறிவேஞானம்
கருணைசெய்பொருளே திவ்ய கதிரொளிசுடரேபோற்றி
தருநிலக்குரியஜீவ தர்ப்பராளன துசெங்கோல்
பெருமையாய்வாழ்கபாரும் பிஞ்சகாகைலைவாழ்வே.

தேவாந்திரன் கவி.

எந்தனின் அமச்சமாரே எடுத்துரைசொல்வேன்கேளும்
சந்தேகமில்லாமல்தானே சார்ந்திடும்இவ்வுலகந்தனில்
குந்தகமில்லாசெழித்து குறையன்றிநடக்கின்றுரா
விந்தையாஎந்தனுக்கு விபரமாய்சொல்லுவீரே.

மார்க்கத்தில் கண்டகனி என்ற மெட்டு.

தேவலோகமதில்மும்முறைதவறுமல் மாதமாரிபெய்யுதா
ஆவலதாகவே அறிவிப்பீர் தெரிவிப்பீர் ஆசையால்எந்தன்முன்னே
தேவஆலயங்கள்தேருஉற்சவம் செய்துநடக்கின்றுரா
பாவலர்நாவலர்கூடியவேதம் பாடியேவருகின்றுரா
சீதளம்பொங்கியேசெந்தாமறைபாரி வனங்கள்க்ஷேமந்தானு
காத்தலுடன் நீங்கள்கறுதுவீா என்முன்னே காக்ஷிகள்யான்பெறவே
அரன் அரிபிர்ம்மமற்றதேவரெல்லாம் வந்துசபைதனிலே
கரதண்டுகாமண்டலம்மேந்தும்முனிவரும்வந்துசூழ்ந்துகொண்டாரா

பொது வசனம்

இவ்விதமாக தேவேந்திரன் தேசவளப்பத்தை விசாரித்து பின் தேவசபை கூடாமையால் தேவர்களை எதிர்பார்க்க அத்தருணம் கைலேயங்கிரி வாசகராகிய பரமக்கடவுள் பூதகணங்களோடு வருகிர விதம்.

ஈஸ்வரன் கவி.

திரிபுரம்யெரித்தநாதன் திருசூலம்கரத்திலேந்தி
சீர்பெரவேலோகம்சென்றிட மன தில்எண்ணி
கார்குழல்பார்வதியும் கர்த்தனும்இடையில்வைத்து
பாரதைபடியளக்கும் பரமனுர்வருகின்ருரே.

ஈஸ்வரன் தரு.

வெள்ளியம்பலவாசர்வந்தேன் நல்ல
சித்தர்கள்முத்தர்கள்நத்தியே போற்றிடும்
கள்ளமில்லாதஈச்ர் வாரேன்
துள்ளிஆவினிலேரும் தும்பிமுகன்வேலன்தந்தை
கள்ளிபார்வதியாளுக்கு கர்த்தன்யிடபாகம்தந்தேன்
சுரு கரமதில்சூலகபாலமும் கொண்டேன்
அரவாபறணம் மீதினில்பூண்டேன் வெள்
சடைமுடிகெங்கைபுனலாட தேவகணங்கள்
சங்குசேகண்டிதாளம் போட
படைபுவளறும்பனைத்தும் படியதுயளக்கும்கர்த்தன்
இடையூர்வராமல் யேகியேகார்க்கும்சித்தன்
சுரு இருகிரிதரைதனில் மறையுருவானேன்
திருஅரிநான்முகன் திரியவேஷய்தேன் வெள்
சிறுதொண்டன்தனேசோதிக்க எண்ணிசங்கமராய்
அத்திமரத்தடியில் குண்ணி
அருமைசீராளன்கரி பெருமையுடனேகேழ்க்க
அருவைமன்னனும்கூடி உருமைமைந்தனையறுக்க
சுரு அரகருவென்றுமே அவர்மனேயடுத்தேன்
பெருமைகள்கொண்டிட பாலனேஅழைத்தேன் வெள
கண்டவர்என்னடிபோற்ற அவர்களுக்கு
சாலோகசாரூபபதி யேற்ற
தொண்டன்சாமிக்கண்ணனுக்கு கண்டுவரமளிப்பேன்
சண்டன்அணுகாமல் கண்டனும்யானும்கார்ப்பேன்

சுரு சர்வசங்கரர் சோமனுநானே
அருவுருகரிதனை உரித்தவன்தானே வெள்

ஈஸ்வரன் கவி.

அடியிணைதொழுதுநிற்கும் அன்பனே நந்திகேளாய்
கடினமாய்தேவசபை கர்த்தனும்செல்லவேண்டும்
படிமிசையோரும்போற்றும் பாவையாள்எனதுதேவி
வடிவுள்ளகௌரிதன்னை வகையுடன்அழைத்துவாருய்

பார்வதிவருகிற கவி.

அலைகடல்மேல்பள்ளிகொண்ட ஆதிநாரணனுர்தங்கை
கலைமுகவதனமேனி கங்கணகடகம்பூண்டு
உலகதைகார்க்குமாதா உத்தமிஎழுந்திருந்து
பலவிதபணிகள்பூண்டு பார்வதிவருகின்றேனே.

பார்வதி தரு.

புவனரக்ஷகிமாது புனஒளியானசாது
பூவைபார்வதியும்வந்தேன் நல்லமுத்தியளித்திடும் சத்தியாள்சாது
கவனமுடையநாதன் கர்த்தனழைத்தசேதி
பவனமுடன்கேட்டு பாவையாள்வாரேன் ஓதி
சுரு பாரினில்புகழ்பெரும் நாரணிசாது
கோரியேவரம்தரும் பூரணிமாது பூவை
அலைகடல்பள்ளிக்கொள்ளும் ஆதிமூலன் தங்கை
அம்மணிஇதோவந்தேன்நல்ல கரியுரிபோற்றிடும்அரனருள்பெறவே
மலையத்துவசன் தனக்கு மகளாகவேஉதித்தேன்
மண்ணுவிண்ணுமரிய மகிடனையும்மடித்தேன்
சுரு மானவர்தானவர் ஞானவர்போற்றிட
கானவர்ராணுவர் பாணவர்யேற்றிட புவன
திங்கள்ஒளியைபோலே தங்கமின்னல்சொலிக்க
தீனதயாபரிவந்தேன் நல்ல
ரத்தினகம்மலுநவமணி மின்ன தீன
மங்களகுணவதிஎங்கும் நிரந்தசாதி
பொங்கரனுர்பாரி தங்கும்இடைஒய்யாரி
சுரு பொருள்வருள்தருள்தரும் அருள்தரும்கவுரி
திருள்உருள்பதம்பெரும் அரனருள்சவுரி புவன
பாலுகாவடிசூழும் வேலுடைதன்னில்வாழும்

பாலன்கவிக்கருள்புரிவேன் நல்ல
பேரதுபெருகவே காலனும்அணுகாமல் பாலன்
நாலுமறைவேதத்தை நன்ருய்யுணரசெய்வேன்
மேலும்வாழையடியாக மைந்தனைவாழவைப்பேன்
சுரு மைந்தன்சாமிக் கண்ணனைகார்த்திட
சிந்தையில்நினைத்திடும் துயரத்தைதீர்த்திட புவன

பார்வதி வந்தனம்.

சுருளிமலை மீதில்மேவும் என்ற மெட்டு.

வெள்ளியம்பலம்மேவும் நாதா மெல்லியாள்பணிந்துநின்றேன் வேதா
நல்ல மல்லிகைமுல்லையும்கொண்டு மங்கையாள்பணிந்துகொண்டேன்
பாரும் என்னை காரும்

ஈஸ்வரன் தரு.

ஆலிலைமேல்பள்ளிக்கொண்டோன் தங்கா ஆவலுடன்வாழ்ந்திருப்பாய் சங்கா
எந்தன் இடபாகம்தானும்பெற்ற மடமயிலே ரஞ்சிதமே
வாரும் விடை பாரும்

பார்வதி வேறு தரு.

காலனையுதைத்தஎந்தன் நாதா கன்னியைஅழைத்தவிதம் வேதா
கலையதைஏந்தும்கையா காரணம்சொல்லும்மெய்யா
வலையநாகவேவந்து மாலைதரித்ததுய்யா

ஈஸ்வரன் தரு.

வாலிசூலிக பாலிகேளும்உன்னை வரவழைத்தசேதிஇன்னும்
மாலியின் தங்கையாளே மர்மமதைசொல்லுவேன்
சாலியீசுவரியேகேள் சஞ்சலமில்லாமல் புல்வேன்

பார்வதி தரு.

எறும்புகடையானைமுதல்மன்ன யேகியேபடியளக்கும்முன்ன
சிறுதொண்டனைசோதித்த சிவனுரோயான் அரியே
உறுமையுடன்சொல்லும் அருவையாள்யான்தெரிய

ஈஸ்வரன் தரு.

பாவையரேசொல்லுவேன்பாரும் இப்போபதில்வார்த்தைசொல்லாமல்நீரும்
தேவசபைசெல்லவேண்டும் தேவிஎந்தன்பார்வதியே
ஆவிதசைபோல்நாமும் மேவியேசெல்வோம்வாராய்

பார்வதி கவி.

அண்டரைகார்க்கஅன்று அதிபுனல்விழியின்னாலே
சண்டனைவென்றநாதா சரகணபவனையீன்ருய்

துண்டன்பத்மனைகொன்று துயரத்தைதீர்த்தஎந்தன்
கண்டனேஉன்வார்த்தைபோல் கன்னியாள்வருகுவேனே.

ஈஸ்வரன் கவி.

மங்கையேமகிக்ஷிகொண்டேன் மாயவன் தங்கையாளே
பொங்கமாதேவசபை பூபனும்செல்லவேண்டி
திங்களும்கெங்கைதும்பை சிரமதில்குலிங்கியாட
சங்கரதேவமூர்த்தி சபைதேடிவருகின்றேனே.

ஈஸ்வரன் தரு.

சங்கரசிவனார்மேவினேன் நல்ல
சங்குசேகெண்டிஎங்கும்முழங்கிட மங்கையர்இருபுரம்மங்களம்பாடிட சங்
பொங்கரவமாலையாட தங்கமயில்வேலன்கூட
தங்கமுடிகுபேரன் திங்கள்ஒளிபோல்நாட
சுரு தவண்டமல்லரி பேரிகளறைபட
துவண்டரிஷிகளும் அருகினில்புரிபட சங்
நந்திஎந்தனை தாங்கவே நல்ல
தொந்தோம்தோமெனமத்தளமடித்திட துத்தியுடன்ஒத்துமுழங்கிட
கந்தார்குழலார்எந்தன் கன்னியிடபாகம்கொண்டேன்
சிந்தையில்மகிக்ஷியாகி இந்திரசபையைகண்டேன்
சுரு சிவகணதேவரும் புகழுடன்சூழ்ந்திட
பலவினைதீர்த்திடும் பரமனார்நீன்றிட சங்

தேவேந்திரன் ப வந்தனம்.

சுவாமியே மவுனசாமி என்ற மெட்டு.

வந்தனம்ரிகநந்தனம் உந்தன்
பாதமலரைநின்று பணிந்துயான் வந்
சுரு சந்திரசடாதரா எந்தனைகாருனேரா
மைந்தன்பணிந்தேன் பாராய்
சிந்தையில்வைத்து னேரா வந்

ஈஸ்வரன் தரு.

போஜனேதேவராஜனே எந்தன்
பாதம்பணிந்ததாலே வாழ்வாய்எந்தநாளும் போஜ
ராஜசுந்திரலோலா தேவாஇந்திரபாலா
வச்சிரபாணிவேலா நீடூழிவாழ்குவாய்மேலா போஜ

தேவேந்திரன் கவி.

எறும்புகடையானைமுதல் யேகியேபடியளக்கும்
திருபுரம்மெரித்தயீசா தேவர்கள்ஒன்றுகூடி
பெறுமைகள்கொள்வதாக பேசிடசபையில்தானும்
அறுவையாள்கௌரியோடு ஆண்டவாவீற்றிருப்பீர்.

பொது வசனம்.

இவ்விதமாக தேவேந்திரன் யீசனை வணங்கி சபையில் வீற்றிருக்கும் தருணத்தில் வைகுந்தம்பீடமாக அமர்ந்தருளிய விஷ்ணுவானவர் லக்ஷ்மி சமேதராக வருகிறவிதம் காண்க.

விஷ்ணு வருகிற கவி,

அண்டர்கள்முனிவர்சித்தர் அடியிணைதொழுதுபோற்ற
தண்டுவாள்சக்கரமும் தரித்தநல்பணிகள்பூண்டு
எண்டிசைபுகழசேஷன் ஏகியேகுடைகவிக்க
பண்டுளதுளபமார்பன் பரந்தாமன்வருகின்றேனே.

விஷ்ணு தரு.

திருமால்என்பவரிதோவந்தார் திருமூவரில்ஒருவர்
திருமால்என்பவரிதோ வாரேன்
பருவாசக்கரம்சங்கு உருவாள்கரத்தில்கொண்டு
கெர்வமான துஷ்டரை பரிவாய்கொல்லுவேன்கண்டு
சுரு கெதிதனைகண்டுமே பதிதனைகார்த்தேன்
சதிசெய்தராணுவர் தன்னையும்மாய்த்தேன் திரு
அத்திதனைகார்த்தமாயன்நானே சித்தமாககராவைபத்தியேகொன்று
அத்திதனைகார்த்தமாயன் நானே
சத்தியேலக்ஷுமி சரசசிங்காரலோலன்
பத்தியாய்உலகத்தை குஷ்டியில்வைத்தசீலன்
சுரு பத்தனும் பரிசுத்தனும்நானே
சித்தமாயாவருக்கும் கர்த்தனும்நானே திரு
அணிந்ததிருநாமம்துன்னநல்ல அணிந்திடும்
பணிகளும்குலிங்கிட யின்று அரியென்றுயாவரும்பன்ன
துணிந்தயிரணியனை துரிதமுடனேகொன்றேன்
பணிந்தபிரகலாதனை பாதுகார்த்துமேகொண்டேன்
சுரு பக்திபுகழ்பெரும் கண்ணனும்நானே
சத்தியாளிட அண்ணனும்நானே திரு

அண்டமெல்லாம்எந்தனைகொண்டாட நல்ல
அண்டமுனிவரும் தெண்டம்புரிந்துமே அண்ட
பண்டுசேர்வேலுடை பதிதனில்வாழும்பாலன்
தொண்டன்சாமிக்கண்ணன் கவிபாடும்மானசீலன்
சரு தொண்டன்தமிழ்தனை கண்டுமேபுகழ்ந்தேன்
பண்டரிநாதனும் கொண்டாடிநின்றேன்

விஷ்ணு கவி.

மாதவாசொல்லைக்கேளும் மனைதனைஏகிநீயும்
காதலுடையமங்கை கன்னிலக்ஷிமியாள்தன்னை
வேதவன்அழைத்தாரென்று விளங்கிடவார்த்தைசொல்லி
ஆதரவாகநீயும் அழைத்தோடிவருகுவாயே

லக்ஷிமி வருகிற கவி.

அறவணைதுயர்ந்தநாதன் ஆதியும்அழைக்கக்கேட்டு
குறைவில்லாபணிகள்பூண்டு கோதையும்எழுந்திருந்து
தறைதணில்வாழும்செல்வம்தந்திடும்மானரூபி
இறையவன்போலமாது லக்ஷிமிவருகின்றேனே

லக்ஷிமி தரு.

அறவணையணிந்தோன்தங்கை பாரெல்லாம்கொண்டாடுமங்கை
ஆதிலக்ஷிமிஎன்னும் அம்மணிவாரேன்
கரமதில்கங்கணமின்ன காதினில்கம்மலுதுன்ன
கண்ணணூர்பாதத்தைக்காண கன்னியும்வாரேன்
பாரினில்வுலாவும்மாது பக்ஷமானவர்க்குதோது
கோரியேவரமளிக்கும் கோதையும்வாரேன்

சேலைபரிமளிக்க ஜெகத்தினில்யோர்களிக்க
பாலகுயிலோவென்ன வஞ்சியும்வாறேன்
தண்டைகீதங்கள்பாட கெண்டைவிழிமாதர்கூட
வண்டணிமலர்கூந்தலாள் வஞ்சியும்வாரேன்
அண்டத்தையளந்தநாதன் அழைத்தநல்லசேதிகேட்டு
கண்டரியவேணுமென்று காரிழைவாரேன் அறவ

லக்ஷிமி வந்தனம் பாலசுப்பரமணிய தேவா என்றமெட்டு.

இரணியசம்மாரதீரா எந்தன் மணாளனே
செந்தார்குணாளனே ஏழைகளைகார்த்தவனே
ஏற்றினேனேஏற்றினேனே பாதம்போற்றினேனே.

விஷ்ணு தரு.

ஆதிசிவன் தங்கையாளே எந்தன்சிங்காரியே
கொந்தார்குழலியே அதிரூபமாமயிலே
அஞ்சுகமேஅஞ்சுகமே வாழுவாய்ரஞ்சிதமே

லக்ஷிமி கவி.

துஷ்டர்களைசங்கரித்த துளபசிங்காரலோலா
இஷ்டமுடன் எனையழைத்த இயலானவார்த்தைதன்னை
அஷ்டகெஜம்பேர்படைத்த ஆனையைகார்த்ததேவா
தஷ்ட அறவம்மீதிலாடும் தர்ப்பரனேசொல்லவேண்டும்

விஷ்ணு தரு.

பார்ரெங்கும்படியளக்கும் பரமன்தங்கையேபெண்ணே பற
பாவையரேசொல்கிறேன்கேள் பாரும்பிங்கையே
ஊர்ரெங்கும்நிறைந்திருக்கும் உத்தமிபத்தினியே
உருதியுடையமானே ஊக்கமதைசொல்கிறேன்கேள்

லக்ஷிமி தரு.

அலைகடல்மேல்பள்ளிகொண்ட ஆதிமூலமேசுவாமி ஆதி
அடியாளையழைத்ததென்ன சொல்லும்னேயனே
கலையதைதரித்திட்ட நீலகண்டன்மைத்துனரே
கடவுளேசொல்லவேண்டும் கரிதனைகார்த்தவரே

விஷ்ணு தரு.

தேவர்மூவர்யாவருக்கும் தேவராஜனும்பெண்ணே தேவ
தேவசபைபோகவேண்டும் பாரும்உல்லாசமா

பாவைஎன்லக்ஷிமியே பைங்கிளியேபோகவேண்டும்
பார்மன்னன்இந்திரன் பொன்னுலகம்காணவேண்டும்

லக்ஷிமி தரு.

சத்தியுடன்பிறந்த உத்தமரேசாமிஉத்தமரே உந்தன்
சித்தம்போல்நடப்பேன் உத்தமரே
அத்திகாலைபிடித்த ஆங்காரமுதலைதன்னை
கத்திவுழவேகொன்ற கண்ணாளாபோகவேண்டும்

விஷ்ணு கவி.

எந்தைனின்வார்த்தைதட்டா எழில்நிரமேனியாளே
சிந்தையில்மகிழ்ச்சியாகி சிறந்தநல்லசபையைநாட
அந்திரதுந்தமிபோட ஆண்டவன்கெருடனேரி
செந்தாமரைப்பாதன் சீருடன்வருகின்றேனே

விஷ்ணு தரு.

பாவையேலக்ஷிமி வாருமேபெண்ணேவாருமே நீயும்
ஆவலாய்கெருடன் ஏறுமேபெண்ணேபோகுவோம்

லக்ஷிமி தரு.

ஆசைநேசமுள்ள மன்னவாஎந்தன்மன்னவா யானும்
பாசமாஏறினேன் முன்னவாஎந்தன்மன்னவா

விஷ்ணு தரு.

காடுவனம்குகைபாருமே பெண்ணேபாருமே அழகாய்
ஆடுது அன்னமயில் பாருமேபெண்ணேதேருமே

லக்ஷிமி தரு.

கண்டுஆனந்தமிககொண்டேனே நாதாகொண்டேனே புஷ்ப
செண்டுமலர்கையில்கொண்டேனே நாதாகொண்டேனே

விஷ்ணு தரு.

இந்திரன்வனமது யோசனைகாதயோசனை செந்தா
பாரிசாதமலர் வாசனைபெண்ணேவாசனை

லக்ஷிமி தரு.

தேக்குகமுகுவாழை சாலையும்நாதாசாலையும் அங்கு
தெரியுதேபலவித சோலையும்நாதாசோலையும்

விஷ்ணு தரு.

பொன்னுலகமதுதெரியுதே பெண்ணேதெரியுதே அங்கு
போகவழியதுபிரியுதே பெண்ணேபிரியுதே

லக்ஷுமி தரு.

மாடமாளிகைவீதிசாலையும் நாதாசாலையும் சித்திர
கோடகோபுரநல்லவேலையும் நாதாவேலையும்

விஷ்ணு கவி.

ஆரடாகாவல்காரா அறைகுவேன்வார்த்தைதகேளும்
பாரடாநீங்களோடி பரந்தாமன்வந்தாரென்று
சூரடாஎந்தனுக்கு குணமுடன்யானரிய
சேரடாதேவனுக்கு சேதியைசொல்லிவாராய்.

இந்திரன் வந்தனம்.

தந்தைதக்குமந்திரம் சொன்ன என்றமெட்டு.

அண்டத்தைமூன்றடியாக அளந்தமாயனே
அளந்தமாயனே என்னைகாரும்உபாயனே

இந்திரன் வந்தனம்.

தண்டுசங்கு யேந்தும்கையா
தாள்பணிந்தேன் யானுமெய்யா
அண்டர்தமக்கு ஆமைரூபம்கொண்டவா
ரூபம்கொண்டவா என்னைகாரும்ஆண்டவா

விஷ்ணு தரு.

சுந்திரவதனமுள்ள இந்திரதேவா இந்திரதேவா
அஷ்டகோத்திர மூவா சுரு
கந்தககர்ப்பக துய்யா
காசினியில்வாழும் மெய்யா
சந்திரன்வதனம்போன்ற சபைஅலங்காரா
சபைஅலங்காரா வச்சிரபாணிசம்மாரா

இந்திரன் கவி.

அண்டத்தையளந்தமாயா ஆதியேசொல்லைகேளும்
தண்டமிழ்நிரந்தஇந்த தேவர்கள்ஒன்றுகூடி
வண்டதுமதுவையுண்ணும் வகையதுபோலஇன்று
உண்டதுகளிக்கஇன்று உத்தமன்நினைத்திட்டானே.

பொது வசனம்,

இவ்விதமாக பிரம்மா விஷ்ணு ருத்திரன் மற்றதேவர்களும் சபையில்நிறைந்து இருக்க திரிலோகசஞ்சாரியாகிய நாரதர் தினந்

தோரும் வழக்கம்போலே தேவசபை போகஎண்ணி சபைநாடி வருகிற விதம்.

நாரதர்வருகிற கவி.

சடைமுடியலங்கரித்து சர்வபூஷணங்கள்பூண்டு
குடைபுகழ்புவனமெல்லாம் ஒருநொடிதனிலேசுற்றும்
விடையவன்போலெழுந்து வீணைதம்பூருமீட்டி
நடைபெருமாயன்பேரன் நாரதர்வருகின்றேனே.

நாரதர் தரு.

நான்முகன் தனக்குமாரன் நாரணன் தனக்குப்பேரன்
நாரதமகாமுனிவர்வந்தேன் இந்த
நாடெங்கும்சுற்றிடும் பேர்புகழ்பெற்றிடும் நார
வான்புவிதேவரெல்லாம் வாடும்படியாகச்செய்தேன்
வல்லவன்சூரபத்மனை வடிவேல்தன்னால்கொன்றேன்
சுரு வகையுடன்முடி சடை களுமாட
பகையவர்கண்டுமே பயந்துமேஓட நான்
எந்தன் தந்தைநான்முகனை கந்தன்சிறையில்வைக்க
சொந்தமுடனேசென்றனே நல்ல
அந்திரர்மகிழவேஅரனிடம்சொல்லிகந்தமாதானஞ்செ ்றேனே
சுந்திரமூர்த்திற்கு சூக்ஷத்தைகாட்டினேன்
சுத்திலும்தேவர்களை கலங்கிடஆட்டினேன்
சுரு சீரதாய்தந்தையை சிறையதைமீட்டினேன்
ஆராதாரப்பொருளை அரனுக்குகாட்னேன் நான்
படிதனில்புகழ்பெற்ற பத்மாசூரன்தன்னை

பரமனல்வரம்பெற செய்தேன் நல்ல
தேவர்கள்சித்தர்கள் சுகமதுகொண்டிட
வடிவுள்ளமாயவன் தன்னால் வல்லவன் தன்னையெரித்தேன்
படியதுயளக்கும்ஈசன் பாலமோகினிதன்னால்
சுரு பையரவரனார் மோகம்கொண்டிட
கையில்அரிஅரன் மைந்தன்பிறந்திட நான்
இன்றுநாளில்கலகம் ஒன்றுஅகப்படவில்லை
நின்றுஞானத்தால்பார்ப்பேனே நல்ல
தேவரும்மூவரும்யாவரும்கலங்க இன்றுகலகம்செய்வேனே
கன்றுமான்சூலமேந்தும் காலகண்டன்பாதம்தொண்டு
கருத்தில்அரகராவென்று கையில்சிவமாலைகொண்டு
சுரு கரியதையுரித்திட்ட கர்த்தனேபோற்றினேன்
நரிபரிசெய்தவர் நருமலர்சாற்றினேன் நான்

நாரதர் கவி.

ஆககாஇன்றுநாளில் அரிந்திட்டேன்கலகம்ஒன்று
வாககாஅமராபதி வகையுடன்செல்லவேண்டும்
பாககாதேவர்மூவர் பார்சபைவரவேகண்டேன்
ஓகோகோயானும்சென்று ஒருநொடியில்கலகம்செய்வேன்

நாரதர் தரு.

அமராபதிதன்னைநாடியே நாரதமுனி
அதிவிரவாய்யோடிவாரேனே நாரதமுனி
திருமால்தனக்குபேரனும் நாரதமுனி
திரிலோகமதைசுற்றிவாரேனே நாரதமுனி
தேவகோமான்தன்னைதேடியே நாரதமுனி
தேவலோகம்நாடிவாரேனே நாரதமுனி
சடைமுடிதான்குலுங்கவே நாரதமுனி
அடையவனம்தாண்டிவாரேனே நாரதமுனி
வீணைதம்பூருமீட்டியே நாரதமுனி
வானவர்முன்ஓடிவாரேனே நாரதமுனி

தேவேந்திரன் வந்தனம்.

சத்திரிஷிகளிலேநாரதரேநீரும் நல்லகெடியும்பெற்றாய்நாரதரே
உத்தமரேயானும் நத்திபாதம்பணிந்தேன்
வத்திகள்வைத்திடாமல் வகையுடன்காக்கவேண்டும்

நாரதர் தரு.

வச்ரசிஆயுதம்மேந்தும் தேவராஜனே
நீயும்வையகத்தில்வாழ்ந்திருப்பாய் தேவராஜனே
பச்சநவரத்தினம் பதித்தமுடிதரித்தாய்
மெச்சிடஉலகதை அச்சமில்லாமல்ஆள்வாய்

பொது வசனம்.

இவ்விதமாக பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரன், முப்பத்துமுக்கோடி தேவர்களும் நார்ப்பத்தி எண்ணாயிரம் ரிஷிகளும் கின்னர், கிம்புருடர், கெருடகாந்தர்வர், சித்திபாவித்தர், எல்லோரும் தேவசபையில் சூழ்ந்து இருக்க அப்போது தேவேந்திரன் நடனம் செய்யும்பொருட்டாக ஊர்வசியை அழைக்க அப்போது ஊர்வசியானவள் நடன சபையை நாடிவருகிற விதம்.

ஊர்வசி வருகிற கவி.

சோமனின்ஒளியைபோலே சொகுசுநல்பட்டுடுத்தி
நேமமாய்கஸ்தூரிவாடை நெத்தியில்திலர்தமிட்டு
காமனை தகிக்கும்மாது கன்னிஊர்வசியாள்தானும்
வாமனர்பாதம்போற்றி வஞ்சியும்வருகின்றேனே.

ஊர்வசி தரு.

உதிக்கும்சந்திரனென்ன பதியில்அகமும்பன்ன
ஊர்வசிமாதுவந்தாள் நல்ல
உச்சிதபலமணி கெச்சைகள்கட்டி ஊர்
கதிரவன்போலேஒளி காதில்கம்மலுமின்ன
கட்டழகர்என்னைகண்டால் காமக்குரோதம்பன்ன
சுரு கஸ்த்தூரிசாந்து சவ்வாதுகள்பூசி
ஆசைகளாகவே கைகளைவீசி உதிக்
அண்டர்தேவர்மூவருக்கும் தொண்டுநடனம்செய்யும்
அருவையாளிதோவாரேன் நல்ல
ஆட்டியேதம்பூரு வீணைகள்மீட்டி அருவை
வண்டுதொனியுடையாள் கெண்டைவிழிசடையாள்
கண்டவரைமயக்கும் கொண்டைஅன்னம்நடையாள்
சுரு கரமதில்கங்கண வளையலுமாட
தரைதனில்கண்டவர் துதிமிகபாட உதிக்
மாணிக்கபுஷ்பராகத்தால் ஆணிபொன்பதக்கம்பூண்டு
மாதுசிரோமணிவந்தேன் நல்ல

மாசில்லாதகுண தாசிகள்கூடி மாது
காணியாளர்எங்களைகடுக அழைத்தசேதி
நாணிசைகைகாட்டி நடப்போம்விலமாதர்ஓதி
சுரு நாகசுரவாத்தியங்கள் முழங்கிட
யேகபோகமாய்நாங்களும் கூடிட உதிக்
கந்தககர்ப்பகநாதன் இந்திரன்சபையைநாடி
கன்னியாளிதோவாரேன் நல்ல
கரியுரிபோற்றிடும் அரன்தன்னைபோற்றி கன்னி
சிந்தையில்நினைத்தவண்ணம் கந்தமலர்பாரிஜாதம்
சொந்தமாய்அணிந்துக்கொண்டு விந்தையாய்வாரேன்விநோதம்
சுரு சொர்ப்பெரும்பெருகியே அர்ப்புதநவமணி
பர்ப்பலநிற்றனம் ஆடிடும்நடமணி உதிக்

ஊர்வசி வந்தனம்.

கந்தாகாருண்யனே என்ற மெட்டு,

மன்னுவந்தனமே மங்கைதந்தனமே மன்னு
செண்பகமலர்கொண்டுமே கோடிவந்தனமே மன்னு

தேவேந்திரன் தரு.

பெண்ணேஊர்வசியே நீடுழிகரசியே பெண்ணே
கண்ணேஇனிருசியே காமமேல்விழிபசியே பெண்ணே

ஊர்வசி தரு.

மூவர்தேவர்யாவர்க்கும் முடிமன்னரேநாதாமுடிமன்னரே
மொழிந்திடும்அழைத்தசேதி முடிமன்னரே
பாவலர்கள்போற்றுமன்னு பகன்றிடவேணுமுன்னு
பாவையாள்அரியும் பார்த்தீபரேசொல்லவேண்டும்

தேவேந்திரன் தரு.

மேட்டிமையாய்உனைஅழைத்த மெல்லியரேபெண்ணேமெல்லியரே
மேன்மையுடன்சொல்கிறேன்கேள் வல்லியரே
நாட்டியங்கள்ஆடிஇன்று நாகரீகம்செய்யவேண்டும்
நாடகசபையைசற்று நன்ருய்தேவர்பார்க்கவேண்டும்

ஊர்வசி கவி.

மன்னனே உன்கருத்தைதபோல மங்கையாள்நாங்கள்கூடி
உன்னிதபுனுகுவாடை உச்சிதநல் கச்சைகட்டி

நன்னையமாகத்தேவர் நாட்டியம் கண்டுமெச்ச
கன்னியாள்சங்கிரதமீட்டி கனகசபை ஆடுவோமே.

ஊர்வசி நடனம்

ஜாயோ ஜாயோ ஜரோயா மனோகரா என்றமெட்டு.

வேலாவேலாவேலா	வள்ளிமணாளா
கோலாகாலாசீலா	உமைபாலா
தத்திம்தகிரதம்	தத்திம்திமிஎன
சுத்திமுகவனை	பத்திநாகசுரம்
சத்தமத்தாளம்	சுத்திபிள்ளாங்குழல்
ததிங்கிண ததிங்கிண	ததிகிணகிடதக

முடுக்கு

தாகிடகிடகிட	ததிங்கணத்தோம்
ததிங்கணகிடகிட	தொந்தொந்தோம்
தளாங்குசெந்தரி	தொந்தொந்தோம்
ததிங்கிணகிடதக	திம்திம்திம் வே

தேவேந்திரன் கவி.

மந்திரிசொல்லைகேளும் மகிழ்ச்சிகள்கொண்டேன்நானும்
சுந்திரமுள்ளமாதர் சொகுசுள்ளநடனம்பார்த்து
சந்திரசேகர்மெச்ச சாரங்கபாணியர்க்கும்
சுந்திரபுஷ்பமாலை சங்கரதேவர்க்குஅளித்திட்டேனே

பொது வசனம்.

இவ்விதமாக ஊர்வசி நாட்டியமாடி பரிசுபெற்று அகன்றுவிட இப்பால் தேவேந்திரன் புஷ்பமாலை அளிக்க வேண்டும் மென்று உத்தேசித்து மும்மூற்றியில் முதமை தங்கிய பரமகடவுளுக்கு அளிக்க அதையரிந்தநாரதன் விஷ்ணுவுக்கும் மற்றதேவர்களுக்கும் கலகம் செய்கிறவிதம்.

நாரதர் கவி.

பாரெல்லாம்அளந்தமாயா பதங்கிநீபூனைபோலும்
பேர்பெரபிச்சைஎடுத்த பேயாண்டிதனக்குமாலை
சீருள்ளதேவேந்திரன் சிவனார்முதல்தெய்வமென்று
தார்குழல்மணிமார்பா தரணியில்பங்கமானீர்

நாரதர் தரு.

தாத்தாஉங்களைமதிக்காமல்இந்திரன் மாலைபுகழாகதந்தானேசுந்தீரன்
காத்தாடிபோலவே கூத்துகளாடிடும்
காத்தான்சுடுக்காட்டான் காளகண்டனுக்குஅளித்திட்டான்

விஷ்ணு தரு.

பேரன்சொன்னது இதுநல்லவாக்கு
இந்திரன்செய்திட்டானே மதிப்பில்லாபோக்கு
பாரதை அளந்திட்ட பரந்தாமனென்றெண்ணமல்
ஊருசுற்றும்ஆண்டிக்கி அளித்திட்டாய்மாலையும்

தேவேந்திரன் தரு.

நீங்கள்இருவரும் ஒன்றுதான்
எண்ணிமாலைகொடுத்தேனே நான்மிகநுண்ணி
தீங்குகள்வராமல் திருமாலேகாத்தருள்
சிங்கமால்ரூபனே சிறுவனைக்காத்தருள்

நாரதர் தரு.

காலனைவென்றிட்ட துண்டரே
ஒருவார்த்தைதகேளுமே கண்டரே
மாலையளித்ததால் மாயவன் கோபாலன்
வலையனுக்கா மாலை அளிப்பதுஎன்றானே

ஈஸ்வரன் தரு

பாறதையளந்திட்டோம் என்றகெருவமோ
என்னைபங்கமாசொல்லிட பருவமோ
திரிபுரமெரித்திட்ட தீரனென்றெண்ணமல்
ஆறுமரியஎன்னை முதல்தெய்வமென்பாரே.

விஷ்ணு தரு

நான்நல்லபெரியபாக்கியனே உன்தொழில்
எடுத்துமேசொல்கிறேன் யோக்கியனே
வானவன்பிரமன்சிரம்கிள்ளியே இந்த
வையகம்ஓடினாய் துள்ளியே
கண்டுவெரியையைநீக்கி கபாளம்தன்னையேகாத்தேன்
சுரு கற்றனென்றுமே சிற்றப்பேசுருய்
பற்றிநீயுமே மெத்தபேசுருய்

ஈஸ்வரன் தரு.

உந்தன்நடத்தைதன்னைமுரடனே நானும்
எடுத்துமேசொல்கிறேன் திருடனே
சுந்திரமுள்ள பிறந்தா வதிக்கிவெரிபிடித்து
அந்திரதேவர்பழிக்க அலேந்தாயே சுடுகாட்டில்
சுரு அந்தசேதியும் நன்றுதெரியுமே
பந்தமாசொன்னால் இன்றுபிரியுமே

விஷ்ணு தரு.

அண்டத்தைஅளக்கும்போது ஈசனே உன்னை
அடியுடனேயளந்தேன் நேசனே
பண்டுபோல்புவனமெல்லாம் கண்டுகுக்ஷியில்வைத்தேன்
கண்டுஇருந்துநீயும் கண்ணனென்று அரியாயோ
சுரு காசினிலுள்ளவர் பேசிடகீர்த்தியும்
மாசில்லாதகுண கேசவன்கீர்த்தியும்

ஈஸ்வரன் தரு.

அடியதைகாணவென்று மாயனே நீயும்
வராகவதாரம்கொண்டாய் மாயனே
படிமிசைதோண்டி பற்கள்தேய்ந்துமேவந்தாய்
தடியொற்றமரம்போலே தயங்கிதியங்கிநின்றாய்
சுரு தீரன்னென்றுமே வீரம்பேசுறாய்
தாரீகன்னென்றுமே சூரிவீசுறாய்

விஷ்ணு தரு.

ராவணசம்மாரத்தில் ஈசனாரே ஓகோ ஈசனாரே
நீரும்-அனுமந்ததூதனாய் ஈசனாரே

ஈஸ்வரன் தரு.

திருபுறதகனத்தில்மாயனாரே ஓகோ மாயனாரே
நீரும்-ரிஷபவாகனமானாய் மாயவரே

விஷ்ணு தரு.

சுந்திரர்க்காய்நீரும்மைத்துனரே ஓகோ மைத்துனரே
நீரும்-தூதுக்குசென்றீரே மைத்துனரே

ஈஸ்வரன் தரு.

பாண்டவர்தனக்காகமைத்துனரே ஓகோ மைத்துனரே
நீரும்-நாடுகேழ்க்கதூதுசென்றாய் மைத்துனரே

பொது வசனம்.

இவ்விதமாக சிவன் விஷ்ணு ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு இருக்கும் தருணத்தில் நாரதரானவர் பார்வதிக்கும் லக்ஷிமிக்கும் கலகம் செய்ய வேணுமென்று சொல்லுகிற விதம்.

நாரதர் கவி.

இதுநல்லகலகமில்லை இருக்குதுபெரியகலகமென்று
பதிதன்னைகார்க்கும்சத்தி பாவையாள்இடமேசென்று
வாதுகள்செய்யவென்று வகன்றிடலக்ஷிமியாளிடம்
ஓதுவேன்கலகம்தன்னை உற்றவர்பழிக்கதானே.

நாரதர் தரு.

உலகதைகார்த்திடும்சத்தி வார்த்தையைகேளுமேபுத்தி
கலகமாஉந்தனை கன்னிலக்ஷிமியாளும்
தலமதிலே சத்தி எனக்குசின்னவளென்று

பார்வதி தரு.

வலியேசண்டைக்குவந்த பொருக்கியே
உந்தன்வாயினில்அடிக்கிறேன் செருக்கியே
சூலியாள்என்றுமே சூக்ஷங்கள்அரியாமல்
எளிதமாகவே எடுத்துரைசொன்னாயே

நாரதர் தரு.

பாட்டியேஒருசேதிகேளுமே அந்தபார்வதிசொன்னதுஇன்னாளுமே
ஆட்டியே ஊதிடும் ஆண்டிச்சிஎன்றுளே
மேட்டிமையாகவே நாட்டமாய்பேசினாள்

லக்ஷிமி தரு,

மடியிழுத்துசண்டைக்குவந்தாளா என்னைபழித்திடமிகநொந்தாளா
தடிசிருக்கிநீயும் தாதச்சி அல்லவோ
அடித்திடஉந்தனை அடிக்குறேன்பாரடி

பார்வதி தரு.

படுத்துஉரங்கஇடமில்லையேஅடியில்லையே உந்தன்சாதியை
எடுத்தோத மிகதொல்லையே
அடுத்துமலைமீது படுத்துமே உறங்கிடும்
தடுத்துபேசினால்இனி தாடையில்அடிப்பண்டி

லக்ஷிமி தரு.

படுத்துஉரங்கஇடமில்லாமல் அடியில்லாமல்உன்னண்ணன்
பார்கடலில்படுத்தான் அதைஎண்ணுமல் அடிஎண்ணுமல்
அடுத்துஇனிசொல்ல அண்ணிஎன்றுஇருந்தேன்
படுத்துபடித்துநீயும் தொடுக்குருய் என்னடி

பார்வதி தரு.

பூஷணமில்லாத-நாயே அடிநாயே உன்னண்ணன்
விஷமதையணிந்தாண்டி பேயே-அடிபேயே
தாஷ்ணமாகவே தளுக்குருய்குலுக்குருய்
ரோஷக்காரிபோலே குலுக்குருய் மலுக்குருய்

லக்ஷிமி தரு.

களகமில்லாபோலேமெல்லியே அடிமெல்லியேஉன்னண்ணன்
துளபமாலைபூண்டான் கள்ளியே-அடிகள்ளியே
தலமதில்தன்னிலே தாண்டியேகுதிக்காதே
தையலேநீறுமே கைகளைவீசாதே

நாரதர் தரு.

தாத்தாவே ஓடிநீவாருமே இந்த பாவையாள்சண்டையைபாருமே
கூத்துகளாடிடும் தாண்டவமூர்த்தியே
பார்த்து சயிக்கமனம் பரந்தாமாதொல்லையே

விஷ்ணு தரு.

தப்படிக்கும்தாதனென்று தையலரேபேசலாமோ
நில்லடி பதில் சொல்லடி
மைப்படிஎன்தங்கைதன்னை மொய்குழலேஎன்னசொன்னய்
தண்டிப்பேன் உன்னை துண்டிப்பேன்

லக்ஷிமி தரு.

வையகத்தில்தப்படிக்கும் தாதஜாதிஎன்றுஉங்களை
செழிக்குமே உலகம் பழிக்குமே
கையைநீட்டிபேசவந்தாய் தங்கையாள்தனக்கு நீயும்
செல்லாதுஉன்பேச்சி வெல்லாது

நாரதர் தரு.

சூலகபாலம்மேந்தும் சோதிசெஞ்சடையோரே
வர்மமா உந்தன் தர்மமா
காலகண்டன்தங்கைஎன்று கண்டபடியடிக்குருய்
கண்ணனும் மேகவண்ணனும்

ஈஸ்வரன் தரு.

தங்கைஎன்றும்பாருமலே கண்டபடிபேசலாமோ
சூலியே ஜெகஜாலியே
மங்கையாரேஆண்டிஎன்று பொங்கமுடன்பேசவந்தாய்
கூசியே கையை வீசியே

பார்வதி தரு.

உலகத்தில்தெரியாதோ ஊதுஞ்சங்குஆண்டியென்று
தெரியாதோ • உலகம் அரியாதோ
நலமுள்ளதங்கையென்று நாகரீகம்பேசவந்தாய்
சித்தனே பரிசுத்தனே

தேவேந்திரன் தரு.

அண்டத்தையளந்தமாயா நீலகண்டஈசனுரே
தேடாதீர் சண்டைபோடாதீர்
கெண்டவிழியொற்ற கௌரிலக்ஷிமிதாயே
வாருங்கள் கிருபைபாருங்கள்

நாரதர் தரு.

பொரும் பொரும்தேவர்களே புத்திமதிஉங்களுக்கு
இல்லையாபெரும் தொல்லையா
ஆறும்அரியாநீங்கள் அடித்துசண்டைபோடலாமோ
பாட்டிலக்ஷிமி சத்திஉத்தமி

ஈஸ்வரன் தரு.

உன்னுல்யல்லவோஇந்த சித்து வித்துகளெல்லாம்
வந்தது கலகம் ஞெந்தது
மன்னுதிஇந்திரனே எங்கள்பதிசெல்லுகுறோம்
பாரும் விடை தாருமே

தேவேந்திரன் கவி.

அய்யனேஉங்கள்பாதம் அடியிணைசிறமேற்கொண்டு
துய்யனேஉங்கள்பதி துருசுடன்செல்லுவீரே

மெய்யனே எந்தன்கீர்த்தி மேதினில்விளங்கதானே
கையனேஉன்பதவியாலே கடையவன்வாழுகுவேனே.

பொதுவசனம்.

இவ்விதமாக தேவேந்திரன் இடத்தில் விடைபெற்று தேவர்கள் அவாள் அவாள் பதிக்கசெல்ல இப்பால் நாரதர் திரிலோகமெல்லாம் சுற்றவேண்டும் என்று பறுவதமுனிவர் ஆசீர்மம் நாடிவருகிற விதம்.

நாரதர் தரு,

ஏதுக்கு இந்தவாது என்ற மெட்டு.

வீணைகையில்கொண்டனர் — வேணகலகம்செய்தனர்
செய்தவர் ஒய்தவர் — திரிலோகமெல்லாம்திரிபவர்
பாணவயர்கணபதி — பாலசுப்பரதினமதி
தினமதி வனமதி — ஓடச்செய்தேன் குகபதி
கண்டன்பத்மாசூரனை — கடுகிஏகி வீரனை
வீரனை தீரனை — எரிசெய்தேன்சூரனை
அண்டன் தன்னைசுற்றுவேன் — அடியார்களைபற்றுவேன்
பற்றுவேன்சுற்றுவேன் — பறுவதமுனியைநற்றுவேன்

பொது வசனம்.

இவ்விதமாக நாரதமுனிவர் பறுவதமுனிவர்ஆசீர்மம் நாடிவர அத்தருணத்தில பறுவதமுனியானவர் தண்டுகாமண்டலத்தோடு வருகிற விதம்,

பறுவதமுனி கவி.

நெத்தில்திருநீரைபூசி நீண்டதோர்சடைமுடியுமாட
பத்தியாய்பரமன்பாதம் பண்புடன் துதிக்கவல்லோன்

எத்திசையில்கண்டோரெல்லாம் யீசனேவென்றுபோற்ற
சத்தியம்தவராபறுவதமுனி இதோவருகின்றேனே.

பறுவதமுனி வருகிற தரு.

தருமசாஸ்திரங்கற்ற பொருமைமினைவையுற்ற
பறுவதமகாமுனிவர்வந்தேன் இந்த
அண்டசராசரமும் எண்டிசைதிரிபவர் பறுவத
வரும்விதிகண்டரியும் வல்லவரிவரென்ன
சுரு வாசவன்யீசனை நேசமாய்போற்றிடும்
பாசமாஆசையை நாசமாய்வென்றிடும் தருமா
போகநிலைசிக்சறுத்த யோகமதைகற்ற
யேகனுகதவரிஷிவந்தேன் நல்ல
வானவர்மோனவர்தானவர் போற்ற யேக
நாகரீகமுடைய யோகதண்டுயிலங்க
சுரு நற்றுசிற்றுகள் மெத்தகற்றவர்
எத்திசைதன்னில் குற்றமற்றவர் தரு
ஐந்துஅறுவைகொண்டு பஞ்சுக்ஷாக்ஷசரத்தைஉண்டு
சிந்தையில்மிகவேபுற்றவன் அந்த
காலாகாலனை நீலகண்டனை சிந்தை
பந்துவர்க்கங்கள்தன்னை சொந்தமில்லைஎன்றறுறத்தேன்
சுரு பத்திமுத்திம் சித்தியும்பெற்றிட
அத்தியையுரித்தோன் சித்தத்தைகண்டிட தரு
காவிருத்திராக்ஷம்பூண்டு தாவியேவாரேன்இன்று
மேவிஆசிர்மம்நாடி இந்த
காசினியோர்களும் பேசிபுகழ்ந்திட மேவி
பாவிசண்டாளர்களை பதைக்கசாபம்கொடுப்பேன்
சுரு பத்திதொழுபவர் முத்தியுமளிப்பேன்
பத்தன்சாமிக்கண்ணன் கவிக்கருள்புரிவேன் தரு

பறுவதமுனி கவி,

அன்பனேசொல்லைகேளும் அமர்ந்திடஆசிர்மத்தில்
தென்பாகஅமர்ந்துயானும் தேவபூஜைசெய்யவேண்டும்
நன்னுககெண்டியில்தானும் நாடியேஜலம்திரட்டி
உன்னிதமானஅன்பா ஒடிநீவருகுவாயே.

பொது வசனம்.

இவ்விதமாக பறுவதமுனியானவர் நாரதரைக் கண்டு சொல்லு கிற விதம்.

பறுவதமுனி கவி.

அறுஉறுகற்றஞானி ஐயனேஉன்பாதம்போற்றி
பெருமையாய்என்னைதேடி பேயன்போல் வந்ததென்ன
தறுநிலைகண்டறிந்ததனயனை ஒருபொருட்டாயெண்ணி
திரிலோகசஞ்சாரிபாதா தெரிவிப்பீர்அறிவிப்பீரே.

நாரதர் தரு.

தவத்தில்சிறந்தவரே தவரிஷியேவாழி
தனையவன்சொல்லுகிறேன் கேளுமையா
பலவினைகளைபோக்க பாடஸ்தளம்காசியாத்திரை
பக்ஷமிகவேகொண்டு இக்ஷணமேஇங்குவந்தேன்

பறுவதமுனி தரு.

திரிலோகத்தைசுற்றும் திருஆழிஏந்தும்கையா
உருமையுடன்யானும்வாரேன் கூட்டிசெல்லுமையா
தருமஸ்தளமெல்லாம் தயாபராசெல்லவேண்டும்
அருமைக்கலையுணர்ந்த பெரியோரேகாட்டவேண்டும்

நாரதர் தரு வேறு

அண்டர்யாவரும்காணதெண்டுகாமண்டலம்கொண்டுமேமுனியோரே
கொண்டுஅதிசயம்கண்டு பார்த்திடுவோம் முனியோரே

பறுவதமுனி தரு.

உந்தன்மொழியபோலே சிந்தைமகிக்ஷிக்கொண்டேன்நாரதரே
சந்தேகமில்லாமலே யிருவரும்ஒருமனதாய்-நாரதரே

நாரதர் கவி.

சந்தேகம்கொள்ளவேண்டாம் சடைமுடியோரேகேளும்
இந்தஆகாயம்பூமாதேவி இவர்கள்சாக்ஷியாக
உடலதுவேருமாக உயிரதுஒன்றாய்எண்ணி
கடவுளரியசத்தியம் கைவிடேன் கைவிடேனே.

நாரதர் வசனம்

கேளும் முனிவரே உடல்வேறாகவும் உயிர்ஒன்றாக இருக்க வேண்டும் உன்கையில் அகப்பட்ட பொருளை என்னிடத்தில்காட்ட வேண்டும் என்கையில் அகப்பட்ட பொருளை உன்னிடத்தில் காட்டு கிறேன் இந்த ரகசியம் ஆகாயவாணி பூமாதேவி இவர்கள் சாக்ஷியாக சத்தியம் ஐயா முனிநாதரே இருவரும் காசியாத்திரை போகலாம் வருவீர் முனிநாதரே.

நாரதர் தரு

காசியாத்திரைசெல்ல ஆசையாய்வாருமே முனிவோரே
வாசிகள்புகழ்ந்திடும் ராமேஸ்வரம்வந்தோம் முனிவோரே

பருவதமுனி தரு.

ராமாராமாவென்று இருவரும்துதிசெய்வோம் நாரதரே
காமனையீன்றிட்ட கடவுளை துதிசெய்வோம் நாரதரே

நாரதர் தரு.

திருகுற்றாலம்நாடி திருவானக்காவல்வந்தோம்முனிவோரே
ஒருமனதாய்துதித்தோமே திருக்கழுக்குன்றம்வந்தோம் முனிவரே

பருவதமுனி தரு.

கருமவினைநீங்கஇருவரும் சேவித்தோம் நாரதரே
திரும்பிஸ்த்தளபெருமை இன்னமும்செலல்லுவீர்நாரதரே

நாரதர் தரு.

சீர்காழிசிதம்பரம் தில்லைசபையைபாரும்-முனிவோரே
பார்புகழும்நடராஜர் பாதத்தைக்கண்டோம் முனிவோரே

பருவதமுனி தரு.

சிவசங்கராவென்று சிவனடிபோற்றினேன்-நாரதரே
பவவினைபோகவென்று பண்பாகதுதிப்போமே-நாரதரே

நாரதர் தரு.

அயன்அரிகாணாத திருவணைபதிவந்தோம்முனிவோரே
அக்கினிமலையாக முக்கியமாய்நின்றவர்-முனிவோரே

பருவதமுனி தரு.

சித்தம்அன்புவைத்து மெத்தவேதெரிசித்தேன்-நாரதரே
அத்திமுகனையீன்ற சங்கராவென்றேனே-நாரதரே

நாரதர் தரு.

காசியில்மூழ்கினோம் காசிநாதாவென்று-முனியோரே
தேசமெல்லாம்சுற்றி ஆசையைதீர்த்தோமே-முனிவோரே

பருவதமுனி கவி.

நாட்டினில்சுற்றிநாமும் நாலுருமாதமாச்சு
தீட்டியமழையின்காலம் திரமதாய்அடர்ந்ததிப்போ
கூட்டியேஉணவுசாதம் கொடுப்பவர்யாருமில்லை
மேட்டிமையாகநீயும் ஒருமொழிபுகலுவாயே.

நாரதர் கவி.

பஞ்சநாள்வந்ததென்று பகன்றிடவேண்டாம்நீரும்
சஞ்சயதேசமாளும் சர்க்குணரானமன்னன்
சஞ்சயராஜன் அன்னம் தானங்கள்செய்வதாக
தஞ்சமாய்நாமும்சென்று தயவுடன்கேழ்ப்போம்வாராய்

பொது வசனம்.

இவ்விதமாக நாரதமுனிவரும் பருவதமுனியும் நாலுமாதமாக காசியாத்திரை செய்துவர அந்தமாதமானது மழைக்காலம்ஆனபடியால் சஞ்சய நகரத்தையாளக்கூடிய சஞ்சய ராஜனவன் தருமத்தில் சிறந்தவனென்று கேழ்விப்பட்டு நாரதரும் பருவதமுனியும் சஞ்சய நகரம் நாடிவரும் சமையத்தில் சஞ்சயமகாராஜன் மந்திரிமார் சூழத் தக்கதாக வருகிற விதம்.

சஞ்சய ராஜன் வருகிற கவி.

மங்களகுணமும்வாய்ந்த மணிமுடிசிரசில்பூண்டு
செங்கோலும்கரத்தில்கொண்டு சீருள்ளமந்திரிசூழ
இங்கிர்தமுடையமாதர் இருபுரம்கவரிவீச
சங்கடம்தீர்க்கும்ராஜ சஞ்சயன் வருகின்றேனே

சஞ்சய மகாராஜன் வருகிற தரு.

அஞ்சாமல்தருமங்கள் தஞ்சமுடனளிக்கும்
சஞ்சயமகாராஜன் வந்தேன் நல்ல

டாரிபேரிகை மீரிஅடித்திட சஞ்
பஞ்சமென்று வந்தவர்க்கு பண்பாய்தானமளிப்பேன்
சுரு பாரினில்அன்னக்கொடி தன்னை நாட்டுவேன்
மீரிடஎந்தன் புகழதை காட்டுவேன்
திரண்டமணிமுடிதினகரன் ஒளிமின்ன
தீரன்கொலுவதாகினேன் நல்ல
பாவலர்காவலர் இருபுரம் சூழ்ந்திட தீரன்
இரண்டசிரமுடைய இருபுஜங்களும்துன்ன
சுரு இருகாதினில்குண்டலம் தகதகவென்ன
அருவுரைசொல்லியே மந்திரிபன்ன அஞ்
சித்திரமுடையமாதர் பத்திஷாமறைபோட
பண்பாய்ஆசீகூறவே நல்ல
அந்தனர்கூடியே விந்தையதாகவே பண்
கத்திகட்டாரிவில்வாள் கரத்தில்தோமரம்கொண்டு
சுரு காசினியோர்களும் காலன்வென்றிட
பேசியேயாவரும் திகிலதுகொண்டிட அஞ்
காலில்வீரகண்டா மணிகள் சத்தம்ஜொலிக்க
கண்ணல்மன்மத னென்னவே இந்த
பூதலமன்னர்கள் கண்டுமே எந்தனை கன்
சூலிகபாலியிட சோதரன் கண்ணன்தன்னை
சுரு சாற்றியேமாயவன் திருவடி பணிகுவேன்
யேற்றியே மனமதில்பூர்த்தியாய் உங்குவேன் அஞ்

சஞ்சய ராஜன் தேவாரம்.

வாசுகிமீதில்பள்ளிகொண்ட வாசவாகேசவாபோற்றிபோற்றி
காசினிதனையளந்த கபடநாடகனேபோற்றி
ஆசிகள்தந்துஎன்னை ஆதரித்திடுவாய்போற்றி
மாசிலாதெள்ளமுதே மாயவாபோற்றிபோற்றி

சஞ்சய ராஜன் கவி.

மந்திரிசொல்லைக்கேளும் மாரிகள்பெய்துஷேமம்
குந்தகமில்லாமல்நீரும் கூறுவீர்அரியதானே
தந்திரம்அறிவுகற்ற தயகுணஎனதுமந்திரி
எந்தனக்குஅரியநன்ருய் இயம்புவீர்தெரியதானே

சஞ்சய ராஜன் வசனம்

கேளும்மந்திரி நம்முடைய சஞ்சய பட்டணத்தையுடைய ஷேமத்தை விசாரித்து சந்தோஷமானேன் தினந்தோரும் பழக்கப் படிக்கி பரதேசிசங்கமர் ஏழையெளியோருக்கு தானமளிக்க வேண் டும் அதனுல் என்பத்தினியாகிய கைகேசியை நான் அழைத்ததாக சிக்கிரம் அழைத்துவாரும் மந்திரி.

கைகேசி வருகிற கவி.

அரசனுர்எனதுநாதன் அழைத்ததோர்சேதிகேட்டு
சிரசினில்நாகசூட்டி சிமிக்கிநல்தோடணிந்து
தரைதனில்ரதிக்குமேலா தையலாள்எனதுமேனி
கரமதில்கங்கணம்பூண்டு கைகேசிவருகின்றேனே.

கைகேசி வருகிற தரு.

வந்தாள்கைகேசிஎன்னும்மாது அதிஒயிலாள்
வாராள்கைகேசி என்னும்சாது
கந்தம்கஸ்தூரிபூசிகன்னி யருடன்பேசி
சுரு கச்சிதபலபணி மெச்சிடபூண்டு
விச்சித்திரமாகவே வருகிறேன்பெண்டு வந்
காதில்ரத்தினதோடணிந்து மாட்டலுடனே
கட்டாணிமோப்புசிமிக்கை புனைந்து
ஜாதிமல்லிகைசூடி சங்கீதராகங்கள்பாடி
சுரு சந்திரன்முகவொளி சிந்தைபெருகிட
அந்திரதேவர்கள் கந்தமெரித்திட வந்

தந்தவரிசைமுல்லையென்ன எந்தன்யிதழ்
கோவக்கனியோவென்று பன்ன
கொந்தார்குழலியான கோதையர்களும்சூழ
சரு கானககிளிமொழி மாதவளென்ன
தீனதயாகுண சாதிவளென்ன வங்
இடையிலணிந்தசேலைபட்டு மேலேவிளங்கும்
தங்கஒட்டியாணம் நல்லகட்டு
கொடைநிழல்அரசாளும் கொற்றவர்அழைத்தசேதி
சரு கோதையரிந்திட மாதுயானுமே
காதலுடனே காணயின்றுமே வங்

கைகேசி வந்தனம்.

ஆண்டிப்மண்டாரம் என்ற மெட்டு.

நாதாவந்தனம் மலர்பாதாதந்தனம் பெண்ணுள்நாதா
கோதரியாஅல்லி கொய்தேன் கரத்தில்மல்லி
ஆதரவாய் யான்பணிந்தேன் ஆணழகாகார்க்கவேண்டும்

சஞ்சயராஜன் தரு.

கண்ணேவாழ்குவாய் காமகனியே வாழ்குவாய்ஆசை கண்
திண்ணமுடையமாதே தேவிஎந்தன் கோதே
என்னுளும்வாழ்ந்திருப்பாய் யேகபோகமாகநீயும் கண்

கைகேசி வேறு தரு.

மண்டலத்திலகெடிபெற்ற மகிடமந்தாதியோரே
மங்கையாரைஅழைத்ததென்ன சொல்லுவீரே

சஞ்சயராஜன் தரு.

கட்டழகிரஞ்சிதமே கானகுயில்மாமயிலே
கன்னியாரேசொல்கிறேன்கேள் காமரதியே

கைகேசி தரு.

அருவுக்குஎத்தஎந்தன் பொருமையுள்ளமணவாளா
பெருமையாய்தான்உரைப்பீர் அருவையாள்நானறிய

சஞ்சையராஜன் தரு.

கோதானம்பூதானம் அன்னதானமளிக்க
கோரியுனையழைத்தேன்ள கோமமேஎந்தன்கண்ணே

கைகேசி கவி.

நாட்டினில்புகழும்வாயிந்த நாதாஉன் வார்த்தைபோலே
மேட்டிமையாக தானம் மேன்மையாய் அளிப்போம்வாராய்
பூட்டியேஇருக்கும்நல்ல பொக்கிஷதனைதிறந்து
காட்டியேஏழைகளுக்கு களிப்புடன் அளிப்போம்வாராய்

சஞ்சயராஜன் தானம் செய்தல்

தானங்கள்செய்தாரே ராஜாதிராஜன் தான
தானங்கள்செய்தாரே தரைதனில்யோரரிய
தீனதயாபரன் திருவடி பணிந்துயான்
கோதானம்பூதானம் வஸ்திரதானமும்
குவலயத்தில்ஏழைபாழை உண்டுமனங்களிக்க தான
நஞ்சைபிஞ்சைவீடு நாடிகேழ்ப்பவர்க்கும்
அஞ்சாமலேகொடுப்பேன் ஆண்டவனருளாலேதான
குத்துவிளக்குசொம்பு மெத்தைத்தலக்காணியும்
பத்திபத்தியாகசித்தம்போல் கொடுப்பேனே தான
பீட்டன்வண்டிகாரு மாட்டுவண்டியுடன்
பூட்டியேயனுப்புவேன் மேட்டிமையாகவே தான
அந்தணர்கள்கேழ்க்கும் விந்தையாபட்டங்கி
சிந்தைமகிழ்ந்துயானும் சொந்தமாகொடுப்பேனே தான
விஸ்வகுலசாமி கண்ணன்கவியைபாடி
அஸ்த்திரத்தால்எடுத்து அளித்தேனேவேணமட்டும் தான

சஞ்சயராஜன் கவி.

தானங்கள் அளித்துயானும் தரைதனில்மகிக்ஷிகொண்டேன்
வானவர்யோர்கள்வாழ்த்த அமந்திட்டேன்சபையில்நானும்
கானகுயிலொற்ற கைகேசிசொல்லைக்கேளும்
மானேஎன்னரிகில் மகிக்ஷியாய்வீற்றிருப்பாய்.

பொது வசனம்

இவ்விதமாக சஞ்சய மகாராஜன் தானமளித்து கொலுவில் வீற்றிருக்கும் தருணத்தில் நாரதரும் பருவதமுனியும் சஞ்சைய நகரம் நாடிவருகிறவிதம்.

நாரதர் வழிநடை தரு.

முனிவரே சஞ்சயநகரம் நாடுவோம்
இனிவாய்கூடி கானசம்நாடி
தனிவழிதாமே நாடி வந்தோமே

பறுவதமுனி தரு.

சந்தணகமுகுவனம் தெரியுது
கந்தமலர்தோட்டம் கன்னியர்கள்கூட்டம்
சிந்தையில்வினோதங்கள் பார்த்துமேவந்தோமே

நாரதர் தரு.

மாடமாளிகைகோபுரம் தெரியுதே
கடைகுளோப்பு பேடையின்கார்ப்பு
மேடதோர் மேன்மையை பார்த்துவந்தோமே

பருவதமுனி தரு.

எண்ணம்போல் ஏகிநகரம் வந்தேமே
திண்ணவேசாதம் நண்ணுக கேழ்ப்போம்
மண்ணுளும்அரசன் முன்னேவந்தோமே

நாரதர் கவி.

ஆரப்பாகாவல்காற்கும் அருவுள்ளசேவற்காரு
பாரப்பாஎங்கள்வார்த்தை பதிலதுசொல்லிடாமல்
கூரப்பாஉங்கள்அரசன்முன்னே குருநாரதரும்வந்தாரென்று
தேரப்பாசீக்கிரத்தில் தெரிவித்துவருகுவீரே

சஞ்சயராஜன் வந்தனம் தரு

சருணம்உந்தன்திருவடிக்கு சாஸ்டாங்கமாயான்பணிந்தேன்
மருமல்லிகைகரத்திலேந்தி மன்னவனும்யான்நரிசித்தேன்
தருணமென்னைகார்க்கவேண்டும் தயாபறமுனியோரே

நாரதர் தரு.

பாதமதைபணிந்தமன்னு பார்தன்னிலேவாழ்ந்திருப்பாய்
ஆதரவாய்பனிந்ததாலே அவனிதன்னில்சீர்த்திபெற்று
பேதகங்கள்இல்லாமல்நீயும் பெருமையுடன்வாழ்ந்திருப்பாய்

கைகேசி வேறு தரு

சருனம்செய்தேன்அய்யனே கருணைதாரும்மெய்யனே
அருவையாளும்யான்பணிந்தேன் ஆதரிப்பாய்துய்யனே

பருவதமுனி தரு.

அருவையாவுபெண்மணி ஆதரித்தேன்நன்மணி
பெருமையான ஆசீர்வாதம் தந்தேன்இதோகண்மணி

சஞ்சையராஜன் தரு.

ஜடைமுடிரிஷீயோரே வாரும் நீங்கள்
வந்தவிபரமதை கூறும்
தடைஇல்லாமல் சொல்லும் தண்டுகாமண்டலரே
விடைஏறும்யீசனைபோல் இருவரும்வந்தீர்களே

நாரதர் தரு.

மழைகாலமானதினுல் ராஜதீரனே நாங்கள்
தங்கஇவ்விடம் வந்தோம் ராஜதீரனே
சுழல்புவியுலகமெல்லாம் சுற்றிஇவ்விடம்வந்தோம்
சுந்தீரனேகேட்டதினுல் விந்தையுடனுரைத்தேன்

சஞ்சையராஜன் தரு.

சந்தோஷமிகவேகொண்டேன் முனியோரே எந்தன்
விடிதிக்கிவரவேண்டும் முனியோரே
சொந்தமுடனேநீரும் எந்தன்பதிதனிலே
சிந்தனைஇல்லாமல் சீராகஇருந்திடீர்

நாரதர் தரு.

தங்கியிருக்கஒருராஜதீரனே நீரும்
மடம்ஒன்றுகட்டிதாரும் ராஜதீரனே
அங்கம்குளிரநிஷ்டை பொங்கமாஎய்குவோமே
திங்களொளிமுடியோனே தீரனேகட்டிதாரும்

சஞ்சைய ராஜன் தரு.

உங்கள்கருத்தின்படி முனிநாதரே ஒரு
நிமிஷம்தன்னில்கட்டிதாரேன் முனிநாதரே
சிங்காரமுள்ளதோர் சித்திரகாரரைகொண்டு
விக்கினமொன்றுஇல்லாமல் விரைவினில்கட்டசெய்தேன்

நாரதர் தரு.

பணிவிடைவேலைக்காக ராஜதீரனே ஒரு
மணிதர்கள்வேண்டுமிப்போ ராஜதீரனே
அணிபணிசிங்காரா அறிவித்தோம்நாங்களுமே
மணிஅரம்கொண்டசிவன் மலரடிபோற்றிடுவோம்

சஞ்சையராஜன் கவி

எந்தன் தவபலத்தினுலே உங்களின்சேர்வைபெற்றேன்
சிந்தையில்மகிக்ஷியாகி சிங்காரமடமும்தந்தேன்

பணிவிடைவேலைக்காக பரமனருளால்வந்த
கனிவானமகள்தன்னை கருத்துடன் அனுப்புவேனே

பொது வசனம்.

இவ்விதமாக சஞ்சையமகாராஜன் நாரதர்கேட்ட வண்ணம் பணிவிடை வேலைக்கு தன்மகளாகிய தமையந்தியை அழைக்க அத் தருணத்தில் தாதிமார் புடைசூழ தமையந்தி வருகிற விதம்.

தமைந்திவருகிற கவி.

நெத்தியில்திலரதபொட்டு நேர்விழிமையைதீட்டி
சித்திரம்போன்றமாது சிலுக்குநல்பட்டுடுத்தி
கத்திரிபாவல்தோடு கங்கணகடகம்பூண்டு
தத்திமிதிமியெனவேமாது தமையந்திவருகின்றேனே.

தமையந்தி தரு.

நல்லதோர்தவத்தால்வந்த மெல்லியதமையந்திமாது
சொல்லும்கிளியானமாது சுந்தரிவாரேன்
கல்லிழைத்தவயரதோடு கங்கணகடசம்மாட
கனகமணியாரமாட கன்னியும்வாரேன்
சத்திஉமைதேவிபோலே உத்தமிஇவளோவென்ன
சத்ததண்டைகீதம்பாட தையலும்வந்தேன்
சாந்துசவ்வாதுவீச தையலர்மனதுகூச
அந்தத்தில்அழகுவாய்ந்த அருவையும்வாரேன்
கன்னியர்இருபுறத்தில் கவரிஷாமரைபோட

சின்னவயதானமாது . சீருடன்வந்தேன்
தந்தையும்அழைத்தசேதி சிந்தையில்மகிழ்ச்சிகொண்டு
சந்திரன்உதயம்போலே தையலும்வாரேன்

தமையந்தி வந்தனம்

தந்தையேஉன்பாதமலர் தாள்பணிந்தேனே
தாள்பணிந்தேனேயானும் சிரம்குனிந்தனே
கந்தமலர்கொண்டுஇதோ போற்றிசெய்தேன்நின்று

சஞ்சையராஜன் தரு.

அருந்தவத்திலுதித்த அருமைசெல்வியே
அருமைசெல்வியே நீடுழிமெல்லியே
பொருமையுடன்இன்னாளும் ஒருபுத்திசொல்வேன்கேளும்

தமையந்தி கவி.

தந்தையேசொல்லைகேளும் தையலைஅழைத்தசேதி
விந்தைநல்வார்த்தைதன்னை விளம்பிடவேண்டும்தானே
உந்தனின்மொழியையானும் உந்தமியானும்தள்ளேன்
சிந்தையில்இருக்கும்வண்ணம் சீருடன்உறைசெய்வாயே.

சஞ்சையராஜன் கவி.

மங்கையேசொல்லைகேளாய் மாமுனிநாரதர்பறுவதற்கும்
சிங்காரமடமேயொன்று செல்வியேகட்டிதந்தேன்
பொங்கலுடன்பூரிசாதம் பூரிப்பாய்பணிவிடைவேலைசெய்து
பங்கங்கள்வராமலேநீரும் பாவையேசெய்துவாராய்

பொது வசனம்.

தமையந்தி தந்தைசொல்மிக்கமந்திரமில்லை என்னும் பழமொழி போல் வார்த்தையை தட்டாமல்படிக்கி தந்தையிடம் விடைபெற்று நாரதரையும் பறுவதமுனியையும் கண்டு பணிகிறவிதம்.

தமையந்தி தரு.

முனிநாதாசருணம் இருவருக்கும்இனிவாகஇத்தருணம்
பனிநீரதுபோலே பாவையாள்யான்பணிந்தேன்
இனிவாய்ஆசீர்வதித்த இன்பம்வைத்தாளவேண்டும்

(நாரதரும் பருவதமுனியும் ஆசீர்வதிக்கின்றார்.)

நா. பறு. தரு

ஆசீர்வாதங்கள்தந்தோம் இருவரும்ஆசீர்வாதங்கள்தந்தோம்

காசினில்தன்னிலே கன்னியேவாழ்குவாய்
மாசிபடாமேனியொற்ற மங்கையேஎழுந்திரு

தமையந்தி கவி

சடைமுடியோரேகேளும் தந்தையின்சொற்படிக்கு
யிடைவிடாமல்யானும் இன்பமாம்அன்னமளித்து
தடைஒன்றும்வந்திடாமல் தையலும்ஏவல்செய்து
நடை பெறஉங்களுக்கு நங்கையும்வந்திட்டேனே.

பொதுவசனம்.

இவ்விதமாக நாரதர் பறுவதமுனி இருக்கும் மடத்தில்வந்து அவர்களைவணங்கி தந்தை சொல்படி நாரதர்க்கு ஓர்அரையில் படுக்க இடம் அமைத்து பறுவதமுனிக்கு ஓர் அரையில் படுக்க இடம் அமைதது இருக்கச்செய்து இருவருக்கும் போஜனம் விரித்து அளிக்கின்ற விதம்.

தமையந்தி தரு. நாரதற்கு அன்னமளிப்பது.

இலைகள்போட்டாளே முனிவருக்கு—இலைகள்போட்டாளே
கலைகள்உணர்ந்திட்ட நலமானமுனிவருக்கு
பலகலைஅரிந்திட்ட பாவைமனமகிழ்ந்து இலை
அத்திகாய்பொரியலுடன் அவரக்காய்தொவட்டலும்
பத்தியாய்பச்சடி பாவைக்காய்பொரியலுடன் இலை
கொத்தரக்காவத்தல் கோடபரங்கிகரி
கத்திரிக்காய்கூட்டல் கருணைகிழங்குடன் இலை
உருளைகிழங்குடன் உண்ணும்பலாக்கனியும்
சிறுபருப்புதையர் அருமையுடன் அளித்தேன் இலை
பாயாசம்அப்பளம் பரிவாகஉண்ணுமென்று
பரிவாய்தெண்டமிட்டு பாவைஒருபக்கம் இலை

நாரதர் தரு.

ஆனந்தம்கொண்டாரே நாரதரும் ஆன
ஆனந்தம்கொண்டாரே அருவைபணிவிடையால்
ஆதிசிவனைபோற்றி அள்ளியேஉண்டாரே ஆன

இதுபோல்சாதம்கறி . எங்கும்கண்டதில்லை
இவ்விடம்இருந்துமே இன்னம்வாங்கியேதின்பேன் ஆன

தமையந்தி கவி.

உருமையாய்நாரதருக்கு உத்தமிசாதம்போட்டு
குருவாகதங்கிருக்கும் கொடிமுடிசடையோர்க்கு
பறுவதமுனியிடமேசென்று பண்பாகசாதம்ஏந்தி
வரும்காலம்கண்டறிந்த வல்லவர்க்களிப்பேன்யானேன்.

தமையந்தி தரு.

அன்னநடைமாது அன்னமளிக்கவேதான்நடந்தாள்
உண்ணவாழகரியுடன் நல்லஉருளைக்கிழங்குடன் தானளித்தாள்
சேமக்கிழங்குகரிகொஞ்சம் கொத்தவரக்காய்வத்தல்தான்அளித்தாள்
செய்தேன்வேணகூட்டமுதெல்லாம் செம்மையாய்அளித்துமேமனங்களித்தாள்

பறுவதமுனி தரு.

கண்டுமனங்களித்து முனிகளிப்புடன்சாதம்தான்புசித்தார்
உண்டுசாதம்போராமலேயின்னம் உத்தமிவையுமென்றார்
திண்டுதலக்காணிபோலேவயிர் தின்றுபெறும்மூச்சிவிட்டார்
தண்டுதடிகைகொண்டுமுனி தாக்ஷண்யமாகவேதானெழுந்து

பொதுவசனம்.

இவ்விதமாக தமையந்தி இருவருக்கும் சாதமளித்து அப்பால் செல்ல அதையறிந்து நாரதர் அந்த பெண்ணைப்பார்த்து காமலாகிரி மேலிட்டு இவளை வசப்படுத்தவேணுமென்று கையில் இருக்கக்கூடிய வீணையை எடுத்து அவள் மயங்கும்படியாய்தானே காமலாகிரிசுரம் வைத்து வாசிக்கிற விதம்.

நாரதர் தரு.

வண்ணான்வந்தானே என்ற மெட்டு.

பல்லவி.

வண்ணன் தேவியே
கண்ணினால் கண்டஆவியே
மண்ணினில்பார்க்கவே எண்ணங்கள்கொள்ளாதே
குண்ணியேமனமது கொக்கோகம்கொள்ளுதே

பல்லவி யெடுப்பு.

சோமன்ஞெளிபோலே சுந்திரம்தந்திரம்செய்தாளேவேலே சோம

மகுடத்தொடர்.

முத்துநவரத்தினமோ இவள் இவள்
எனக்குஏற்றசித்தினமே சபாஷ் சபாஷ்
சித்திரபதுமைபோலே பிரம்மன் பிரம்மன்
சிருஷ்டித்தானேஇந்தவேலே வேலே வேலே

பல்லவி யெடுப்பு.

சிவனும்வாடுதே இருகன்
இருளும் மீறுதே

நாரதர் கொச்சகம்.

கோமளமேரஞ்சிதமே கோகிலமேஉன்னைக்கண்டு
காமமிககொண்டனடி கட்டழகிஉன்னாலே
சித்தமிகவைத்து சேருவாளோஎந்தனை
பித்துகொண்டதுபோல் பிதருதேஎந்தன்நெஞ்சம.

பொது வசனம்.

இவ்விதமாக நாரதர் மையல்கொண்டு வீணையைவாசித்து அதைகண்ட தமையந்தி சங்கீததொனி காமசுரத்தால் நாரதர் மீதில் மையல் கொள்வது.

தமையந்தி தரு.

சகிமாரேஇங்குவாருங்கள் இந்த
சங்கிததொனியை கேளுங்கள்
பாவையேஇதுநல்லகீதம் எந்தன்
உள்ளம்களிக்குதே ஓதம்
சங்கிதவித்தையில்தீரன் இவர்
எந்தனுக்குநல்ல மாரன்
ஏவல்கள்மிகவேசெய்குவேன் எந்தன்
ஆவல்தனை உய்குவேன்

தமையந்தி சீசபத்தியம்

என்னடிஎன் தாதிகளா ஏங்கிமனம்வாடுகிறேன்
மன்மதனார்கணையினாலே மார்புருகிபோகுதடி

கன்னியாரோஇவருடனே கலந்துவிளையாடுவேனே
பன்னியேநீங்களெல்லாம் பலவாராய்சொன்னபோது

சீசபத்தியம் தரு.

பாவையேஉங்கள்சொல் ஏர்க்கையானே
கோவைகனியொற்ற சகிமானே
ஆவலைத்தீர்க்காமல் இனிகானே
போவதுசரியில்லை இப்போதானே

பொது வசனம்,

இவ்விதமாக தமையந்தி நாரதர்மீதில் மையல்கொண்டு பல வாறு எண்ணிக்கொண்டு மர்மமாக இருந்து பணிவிடைவேலையில் நாரதர்க்கு எண்படங்காகவும் பறுவதமுனிக்கு ஒருமடங்காகவும் செய்துவர இதை பருவதமுனிகண்டு சந்தேகமுற்றிருக்க ஒருநாள் நாரதர் தமையந்தியை அழைத்து கைகால் பிடிக்கச்சொல்ல தமை யந்தி அவ்விதமே ஏவல் செய்கிற விதம்.

நாரதர் சம்பை தரு.

ஐயோஇனிஎன்னசெய்வேன் ஏவல்செய்யும்கன்னியரே
கைகாலெல்லாம்சோருதிப்போ கட்டழகிஎன்னசெய்வேன்
பாதமுதல்சிரசுமட்டும் பாவையரேபிடிக்கவேண்டும்
ஆதரவாகிட்டவாரும் அடிவேன்துயர்தன்னைதீரும்

தமையந்தி தரு.

பாதங்கள்பிடித்தாளே தமையந்தி பாத
பாதங்கள்பிடித்தாளே பக்ஷமிகவேவைத்து
காதல்கொண்டதினல் மாதுமனம்வைத்து பாத
முழங்கால்துடைவறையில் மெதுவாகபிடித்தேனே
தழுவிடவேமார்பு தலைநெத்தியுள்ளமட்டும் பாத

பொது வசனம்.

இவ்விதமாக நாரதர்க்கு தமையந்தி கால்கை பிடித்துகொண்டு வஞ்சனை துரோகம் செய்ததினல் பறுவதமுனியானவர் கோபகுரி புடனே நாரதரைப்பார்த்து சொல்லுகிற விதம்.

பறுவதமுனி கவி.

சஞ்சலமெல்லாம்தீர்த்த சடைமுடிவீணையோனே
அஞ்சாமல்சொன்னசத்தியம் அருவினில்நினைக்காமலே

வஞ்சககாரனென்று வகையுடன் அரியாமல்வந்தேன்
மஞ்சள்பூசும்கன்னியிடம் மாரன்போல்இருக்ககண்டேன்.

நாரதர் கவி.

சத்தியம்தவரிநடந்தேன்னென்று சத்திகீர்த்திபோல்பேசவந்தாய்
உத்தியாய்போகும்இடத்தில் ஒருபொருள்கிடந்தெடுத்தால்
சித்தமாய்கொடுப்பதுண்டோ சேதிநீஅரிந்திடாயே
உத்தமன்போலேவந்து உளராதேவெளியேசெல்லு.

பருவதமுனி கந்தார்த்தம்.

வெளியநீபோடாவென்று விமலனேபேசவந்தாய்
தளிர்கொண்டதீக்ஷணம்போல் தடாபடாகோபம்கொண்டு
களிப்பதுகொண்டகர்வம் கண்டிக்கசாபத்தாலே
ஒளியுன்முகம்குரங்காபோக.

பரு. தரு.

இட்டனேசாபம் உந்தன்மீதில்
கொண்டனே கோபம்
தட்டாமலேஇதோதந்தேன் குரங்குமுகம்
அட்டியில்லாமலே அடித்திட்டேன் களித்திட்டேன்

நாரதர் கந்தார்த்தம்.

அல்பகாரியத்துக்கு ஆகாகசாபம்தந்தால்
இலுப்பைகொட்டைபோலே இருந்துமேசெக்குக்குள்ள
அலசலும்பட்டுதானே அதுக்குள்சொழுளதுபோலே
பூலோகம்தன்னில் சென்று.

நாரதர் தரு.

பிடிபிடிசாபம் உந்தன்மீதில்
கொண்டனே மனஸ்தாபம்
அடியாரைகார்க்குமெந்த அண்டர்பதிபோகாமல்
படிமிசையலந்திட பிடிபிடிசாபம்தன்னை

பொது வசனம்.

இவ்விதமாக ஒருவர்க்கொருவர் சாபம்தந்து நாரதர்இட்டசாபத்தால் பருவதமுனி சொர்க்கலோகம் போகாமல்படி பூலோகம்செல்ல பருவதமுனி கொடுத்தசாபத்தால் நாரதர்தமக்கு குரங்குமுகம் நேர்ந்ததென்று புலம்புகிறவிதம்.

நாரதர் கவி.

அயயோநான்என்னசெய்வேன் அருமுனிசாபம்தன்னால்
உய்யவேசாபம்வந்து உருகுதேமேனியெல்லாம்
அருங்கடல்பள்ளிகொண்ட ஆதிமூலாஉன்னருள்தானே
குரங்கினின்முகமும்வாய்ந்தேன் குவலயத்தோர்நகைக்கத்தானே.

நாரதர் சம்பை தரு.

அய்யோநான்என்னசெய்வேன் ஆதிமூலநாரணனே
அயன்பிரம்மன்விதித்தவாறே இந்தபங்கபடலாச்சுதையோ
சத்தியம்மறந்ததினால்என்னே தண்டிக்கநாளுமாச்சே
பத்தியுள்ளதமையந்தி பாவைதன்னால்நேர்ந்துதையோ
குவலயத்தோர்பழிக்க குரங்குமுகமானேனேயோ
பவவினைநீக்கும்கண்ணா பரந்தாமாஎன்னைகாரும்
எங்குநான்செல்வேனேயோ மங்கைலக்ஷிமிமார்பா
அங்கம்யீனம்வந்துதையோ ஆதிமூலநாரணனே

தமையந்தி தரு.

புலம்பிதவிக்காதேமுனிவரேஒன்றும்பிழைமோசம்வராதுயினியோரே
கலகங்கள்கொள்ளாதீர் கன்னியுனைமணர்ந்து
நலமாகஇருவரும் நாடி பிழைக்கலாம்

நாரதர் தரு.

குரங்கென்றுஎந்தனைபெண்ணே என்னைகூடிவாழுவாயேகண்ணே
கருங்கூந்தலுடையகண்ணே உந்தன்நாலே
பருவதமுனியோரும் பகர்ந்தாரேஇந்தசாபம்

தமையந்தி தரு.

ஆகாயவாணிமீனாக்ஷி உன்னைகைவிடேனேஇதுசாக்ஷி
அண்டதேவர்யாவரும்பத்தியம் இதோசெய்துமேதந்தேன்சத்தியம்
அருமுனிநாரதரே அன்பது கொள்ளுவீர்

நாரதர் தரு.

உந்தன்தந்தைதாய்கன்னியே அவர்ஒத்துகொள்ளுவாரேசொன்னால்
சிந்தைகலங்கியவர்சீச்சி வானரம்மென்பார்
கந்தாகுழலியாளே கன்யென்செய்வேன்னி

தமையந்தி கவி.

தினகரன்மதியும்தானும் தெக்குவடக்கில்முளைத்திட்டாலும்
கனமானசெய்தசத்தியம் கன்னியாள்மரப்பதுண்டோ
தந்தைதாய்வார்த்தைதட்டி தர்ப்பராஉன்னைமணருவேன்
சிந்தையுங்கலங்கவேண்டாம் சீருடன்வீற்றிருப்பீர்

பொது வசனம்.

இவ்விதமாக தமையந்தி நாரதர்க்கு உன்னை மணர்ந்து கொள்ளு கிறேனென்று சத்தியம் செய்திருக்க சஞ்சயமகாராஜன் நம்முடைய புத்திரியாகிய தமையந்திக்கி பருவகாலம் வந்தபடியால் நல்ல அரச னுக்கு பாணிகரணம் செய்யவேண்டுமென்று உத்தேசித்து தமையந் தியை அழைத்து வருகிறவிதம்.

தமையந்தி ஓரடி தரு.

என்னகாரணத்தினல்தந்தையாரே எந்தனைஅழைத்தீர்தந்தையாரே

சஞ்சயமகாரராஜன் தரு.

பருவகாலம்வந்ததினுல் அம்மணியேஉனக்கு
திருமணம்செய்யவேண்டும் கண்மணியே

தமையந்தி தரு.

மணமதுசெயதுகொள்ள விருப்பந்தானையாஎனக்கு
மாப்பிள்ளை எங்குபார்த்தீர் சொல்லுமையா

சஞ்சயராஜன் தரு.

அழகுரஞ்சிதமுள்ள கோமளமே நல்ல
அரசனைபார்த்து செய்வேன் கோமளமே

தமையந்தி கவி.

நல்லதுபோதும்போதும் நாயங்கள்சொல்லவந்தீர்
கல்லதுபோலேநாதன் கன்னிக்கிமுன்அமைத்துவைத்து
நாலொருமாதமாக நங்கையர்இருக்கநாதன்
மேலுமேலாகவார்த்தை மேன்மையாய்சொல்லவந்தாய்

சஞ்சயராஜன் கவி.

செல்லியேஎன்னவார்த்தை செப்பிடவந்தாய்நீயும்
மெல்லியேஉனக்காம முன்னமேவரன்அமைத்தேனென்று

நாலொருமாதமாகநாடியேவந்திருக்கும் ஆடவன்யார்தானம்மா
வாலவயதுள்ள வஞ்சியேசொல்லுவாயே.

தமையந்தி தரு.

தவத்தில்சிரந்தோரான நாரதரும் • எனக்கு
நாயகனுகவேண்டும் தந்தையாரே
புவனத்தில்யோர்அரியபூமாலே சூட்டவேண்டும்
பூவைஎன்எண்ணம்போலே புண்ணியரேசெய்யவேண்டும்

சஞ்சயராஜன் தரு.

போபோபயித்தியம்கொண்டாயோ அந்த
பேயனேஅனேந்திட விண்டாயோ
பாரினில்ளுள்ளோர்கள் பழிக்கஇடம்தந்தாய்
பிச்சாண்டிதன்னே மணாஎண்ணங்கொண்டாய்

தமையந்தி தரு.

பிச்சாண்டிஎன்றுமே நினேக்காதே உந்தன்
கறுத்துபோனபடி மதிக்காதே
மெச்சிடவரும்காலம் மேண்மையாய்தெரிந்தவர்
அச்சங்கள்கொள்ளாதே அவரேஎனக்குநாதன்

சஞ்சயராஜன் தரு.

புத்திமதிஉனக்குயில்லேயா அந்த
பேயாண்டிமீதினில் தொல்லேயா
சித்திரம்போலவே உத்தமிநீயாச்சே
கத்திபிச்சைவாங்கும் ஆண்டிக்கிகொடுப்பேனே

தமையந்தி தரு.

அடித்துதிட்டினலும் அனியாயம்செய்தாலும்
அவரைவிடயானும் ஒருவரைமணற்வேனே
அவர்ஆசைபாசங்களே இனிமேலேமரவேனே

சஞ்சயராஜன் தரு.

வேலிக்கிமுள்ளதுபோடவே எந்தன்காலினில்தச்சுதேவாடவே
வானரமுகமது வாய்த்துதே அவனுக்கு
வஞ்சியேஅவன்மீது கொஞ்சியேபேசுராய்

சஞ்சயராஜன் கவி.

நலமுள்ளமந்திரிமாரே ஞாயத்தைகேளும்கேளும்
வேலிக்கிமுள்ளுபோட என்காலில்தைத்ததுபோல்
காலியாய்சுற்றும் ஆண்டியைநான்களிப்பாகமடம்கட்டிவைத்த
உலகத்தார்பழிக்கநானும் உரிதியும்தேடினேனே [தால்

சஞ்சையராஜன் வசனம்

கேளும்மந்திரி வேலிக்கிமுள்போட என்காலில்தைத்ததுபோல் அபையமென்று வந்தஆண்டியை ஆதரித்து அவருக்கும் மடம்கட்டி பணிவிடை வேலைசெய்ய என்புத்திரியை அனிப்பினேன் ஏதோ ஆண்டியாகிய நாரதன் சொக்குபொடி போட்டுவிட்டான். அதுமில்லாமல் படிக்கி பறுவதமுனியால் குரங்குமுகமாய் பெற்றுக்கொண்டான் என்மகள்தமையந்தி அவரையே மணம்புரிவேனென்று ஒரே உருதியாய் தெரிவிக்கின்ருள் யாரால்வந்த சருக்குஎன்ருல் மழையால் வந்த சருக்கு என்பார்கள். அதுபோல் நாமே தேடிக்கொண்டகாரியம் நான் என்னபுத்திசொன்போதிலும் கேழ்க்கவில்லை அதனுல் என் தேவியாகிய கைகேசியை அழைத்து வாருங்கள்மந்திரிமாரே.

கைகேசி கவி.

நாதனே எனைஅழைத்த நாயங்கள்என்னமோதான்
ஓதவேவேண்டும்தானே உத்தமிஅரியநன்ருய்
சீதளம்போன்றமுகம் சோர்ந்துமேஇருப்பதென்ன
காதலுடையநாதா கருதுவீர்அரியதானே.

சஞ்சையராஜன் கவி.

அன்னமேதேனேகேளாய் அவதிகள்நேர்ந்ததிப்போ
கன்னியாள்நமதுசெல்வி காரியம்செய்ததெல்லாம்
இன்னிலமன்னரெல்லாம் இகழ்ந்திடகாலமாச்சி
பின்னிட்டுபழிப்புக்கிடம் பேதயேதேடினேனே.

சஞ்சையராஜன் புலம்பல் தரு.

அருந்தவத்தால்வந்த அருமைசெல்விக்குதானும்
பெருமையாய்மணம்செய்ய புத்தியிலஎண்ணங்கொண்டேன்
ஆவலாய்அழைத்துமே அரிவித்தேன்யானுமேபெண்ணே
ஆசையெல்லாம்நீக்கி மோசங்கள்செய்தாளே கண்ணே
மடத்தில்இருக்கும்ஆண்டி அவரேகணவனென்று பெண்ணே
திடமாகமனமது அடவுடன்செய்என்ருள் கண்ணே

அருமைக்குபுத்திசொல்லி உருமையாய்வாரும் பெண்ணே
சிருமைகள்வாராமல் பெருமையைதேடிவாரும் கண்ணே

கைகேசி வசனம்.

கேளும் நாதா உனக்குவிசனம் வேண்டாம் நான் சென்று குமாரச்செல்விக்கு புத்திசொல்லி வருகிறேன் நாதா.

கைகேசி தரு.

பெறுமையுடன்பிறந்த அருமைஎந்தன்மகளே
புத்திமதிஇல்லையா உந்தனுக்கு
அறம்நெரிகல்விதன்னை அழகாககற்றுஉணர்ந்தும்
தறதன்னில்சுற்றும்ஆண்டிக்கு தையலேகொடுக்கபோமோ

தமைந்தி தரு.

அன்னையாரேநீரும் சொல்லும்வார்த்தைகளெல்லாம் என்
செவிதனில்ஏர்க்குமோ அன்னையாரே
பின்னமில்லாமல்எந்தன் சிரசில்விதித்தவண்ணம்
பிசகிநடக்குமோ சொல்லுமம்மா
நன்னையமாமுனிவர்க்கு நாடிமணம்செய்துவைபபீர் அன்னையரே

கைகேசி தரு.

தந்தைதசொல்மிக்க மந்திரம்இல்லையன்று
தையலரேநீரும் படித்துஇருந்தும்
சிந்தைபோனபடி செப்பிடலாகுமோ
எந்தன்வார்த்தைதட்டவேண்டாம் இன்பமுள்ளஎனதுசெல்வி

தமையந்தி தரு.

பன்னிபன்னிபேசினல் பாவையேஎந்தன்உயிர்
பரகதியாக்கிடுவேன் அன்னையரே
கன்னிஎன்எண்ணம்போலேகருதிமணம்செய்யாவிட்டால்
கற்றன்பதிசென்றிடுவேன் கட்டாயம்இதுசத்தியம்

கைகேசி வசனம்.

கேளும் நாதா நான் என்ன சொன்னபோதிலும் கேழ்க்க வில்லை பிரமனுடைய ரவிபோல் முடியவேண்டும் பிராண நாதா.

கைகேசி கவி.

கண்ணுளாயானும்சென்று கனிவாகயுரைததுபார்த்தேன்
பெண்ணும்உருதியாக பிழைமோசம்செய்தாள்ஐயோ

கொண்ணனூர்விதிபடிக்கி கோரியேமுடியுமோயன்று
எண்ணுதுஎண்ணவேண்டாம் ஏகிமணம்முடிப்பாம்நாதா.

சஞ்சையராஜன் கவி,

அவரவர்கள்விதிகள்தன்னை விலக்கிடநம்மாலாமோ
கவனமுடையமந்திரி கன்னியாள்எண்ணம்போல்
தவரிஷிகன்னியாளுக்கும் தரணியில்யோரரிய
நவகிரகம்சுபதினத்தில் நருமணம்செய்யவேண்டும்.

பொது வசனம்.

இவ்விதமாக அவாள் அவாள் விதிபடிமுடியுமென்று தாய் தந்தை மற்றபந்துகள் எல்லோரும் சம்மதித்துஅம்பத்தாறுதேசத்து அரசர்கள்சூழும்படியாக நாரதர்க்கும்தமையந்திக்கும் திருமணம் செய்கிறவிதம்.

பிராமணர் தரு.

கல்லியாணம்செய்தாரே வேதியரும் கல்லியாண
கல்லியாணம்செய்தய்ரே கன்னிதமையந்திக்கி
நல்லசுபதினத்தில் நலமாகவேகுரித்து கல்லியாண
சாலுங்கறகமுடன் அரசாணிகால்நிருத்தி
மேலும்வளரஒம குண்டங்கள்வளர்த்தி கல்லி
அண்டர்வசுகளெல்லாம் ஆகாயம்தன்னிலே
அள்ளிஅள்ளிமலர் தெள்ளியேதூவிட கல்லி

பொது வசனம்.

இவ்விதமாக நாரதர்க்கு தமையந்திக்கும் மணம்முடித்து மணவரகோலமுடன் இருக்குமுன்னே சாபம்தந்துபோன பறுவதமுனி நாரதர் நிலைமையை பார்க்கும்பொருட்டாக வருகிற விதம்.

பறுவதமுனி தரு.

பறுவதமுயும்வாராரே நாரதர்முன்னே பறுவ
பறுவதமுனியும்வந்தார் பிரியமிகவேகொண்டு
திருபுனல்சடையாட தீவிரமாய்ஒடிவாரார்

நாரதர் தமையந்தி தரு.

பாதம்பணிந்துநின்ரோம் பாவையாள்நானுமாக
பக்ஷம்வைத்துஆளவேண்டும் முனிவோரே

ப்றுவதமுனி தரு.

ஆசீர்வாதம்ஆசீர்வாதம் நாரதமுனிவோரே
அவனில்கீர்த்திபெற்று வாழ்ந்திருப்பாய்

நாரதர் தரு.

செய்தகுற்றம்மெல்லாம் பெருதாய்எண்ணுமலே
சாபத்தைநீக்கிடுவீர் முனியோரே

பறுவதமுனி தரு.

ஆனந்தசந்தோஷம்கொண்டு அளித்திட்டசாபம்தன்னை
ஆவலாகசாபம்தன்னை நீக்கினேனே

நாரதர் தரு

நல்லஉருவைபெற்று கள்ளமில்லாமல் யானும்
நார்கொடுத்தசாபம்தன்னை நீக்கினேன்னே

பறுவதமுனி தரு,

உலகத்தில்கீர்த்திபெற்று நலமுடன்வாழ்ந்திருப்பாய்
கலகமில்லாமல்யானும் கர்த்தபாதம்கண்டுவாரேன்

நாரதர் கவி.

பாரெல்லாம்சுற்றிவந்த பருவதமுனிநீயும்
கார்குழல்தமையந்திஎண்ணம் கறுத்துபோல்முடிந்ததிப்போ
சீருடன்சொர்க்கலோகம் சென்றுமேகீர்த்திபெற்று
தார்சுழல்தேவலோகம் தாவிநீசென்றுவாராய்.

பொது வசனம்.

இவ்விதமாக ஒருவர்க்கொருவர் சாபத்தைநீக்கிநாரதரிடம் பறுவதமுனி விடைபெற்று சொர்க்கலோகம் செல்ல சஞ்சயமகாராஜனுக்கும் கைகேசிக்கும் மருமகனுகி நாரதர்வடிவைகண்டு சுகமாக இருக்க சிலநாள் நாரதர் தமையந்தியிடம் வாழ்ந்து தமையந்திக்கிமர்மமாகசிலவார்த்தை உறைத்து முன்போலே தேவலோகம்சென்றுவிட்டார்.

சுபம்!!! சுபம்!! சுபம்!

கவி.

சீரபெறநாடகததை எழிதினோர்வாழி வாழி
பார்தன்னிலேஆடும்பாலர் பரமனார்பாதம்வாழி
மேரதுகிரியைபோலே மேண்மையாய்வாழி வாழி
சான்றோர்கேட்டோரெல்லாம் சாலோகபதவிவாழி.

சுபமங்களம்! சுபமங்களம்!!

நாரதர் புராணத்தில் ஓர் பாகமாகிய

தமையந்தி நாரதர் கலியாண நாடகம்.

முற்றுப்பெற்றது.

போற்றிடும் காரிநாகம் புண்ணியர் சேர்ந்து நோக்கில்
காற்றினா லனலால்வீடுங் கண்டிடும் பதிபாழாமே 16

சாடிய விரண்டாமாதி சனியுடன் தீயர்கூடில்
தேடியப் பொருளுஞ்சேதம தனம்நகைக் கள்ளர் கொள்வார்
நாடிய வயதுநான்கில் நன்மனை விற்கலாகும்
வாடிய மனைவிமைந்தர் வளர்மனை யிழக்கலாமே. 17

கண்டிடும் மிரண்டாமாதி கதிக்கநல்லுச்சம் பெற்றால்
நின்றிடும் வயதுநூறு சிலவரம் குருவே நோக்க
கொண்டிடும் வயதுநூறுக் குறைபடா யோகஞ்செல்வம்
வெண்டிடும் மகம் இருப்பு விளங்கிடும் வயதுநூறே. 18

மனைக்கிரகம்.



மனைக்கு க்ரக மடைக்க விபரம்.

கீழ்மேல் 10, தென்வடல் 12, ஆகக்குழி 120, இதை 12-ல் கழிக்கச் சரியாய்ப் போனபடியால், லக்கினம் மீனம் ஷை துருவம் 120 ஐ, சூரியன் தசையாகிய 6-ல்பெருக்க, 720, இதை 12-ல் கழிக்க சரியாய்ப்போனபடியால் 12-வது ராசியாகிய மீனத்தில் சூரியன் மேல்கண்ட துருவம் 120, ஐ, சந்திரன் தசையாகிய 10-ல் பெருக்க 1200, இதை 12-ல் கழிக்க சரியாய் போய்விட்டபடியால், 12-வது ராசியாகிய மீனத்தில் சந்திரன், ஷை துருவம் 120, ஐ, செவ்

புதிய நாடகவிளம்பரம்.

போகர் பாக்கெட் கொக்கோகம் மூலமும் - உரையும் 64. படங்களுடன் விலை	1	0
பாக்கெட் மலையாள மாந்தரீக ஆசான் 108 - சக்கரம் அடங்கியது விலை	1	0
பாண்டவர் வைகுந்த நாடகம்	0	4
நீலி நாடகம்	0	4
சந்திரன் கெர்வபங்க நாடகம்	0	4
அர்ஜுனன் தேவப்பட்ட நாடகம்	0	4
நாடகங்களில் ஓர் திலகமாகிய முத்திராஜன் நாடகமென்னும் சத்தியாவதி கலியாண நாடகம்	0	4
போர்மன்னன் சண்டை நாடகம்	0	4
துர்க்கா பரமேஸ்வரி நாடகம்	0	4
மாரியம்மன் உற்பத்தி நாடகம்	0	4
சவுந்திரவல்லி மோக்ஷ நாடகம்	0	4
ததிபாண்டன் மோக்ஷ நாடகம்	0	4
ஆரவல்லி சூரவல்லி நாடகம்	0	4
கண்ணப்ப நயினார் நாடகம்	0	4
பத்மாசூர நாடகம்	0	4
பட்டினத்தார் நாடகம்	0	4
பிரம்மாவை சிறைவைத்த நாடகம்	0	4
பாதாள மயில்ராவணன் நாடகம்	0	4
மீனாக்ஷி அம்மை திருக்கலியாண நாடகம்	0	6
பவளகொடி கெர்வபங்கம் நாடகம்	0	6
பிரம்மதேவன் கெர்வபங்கம் நாடகம்	0	6
சூர்ப்பநகை கெர்வபங்க நாடகம்	0	6
ஈஸ்வரன் விறகுவிற்ற நாடகம்	0	6
தக்கன் வேள்வி வீரபத்திரர் நாடகம்	0	5
மருஷபிறப்பு கிருஷ்ணநாரதி கெருவபங்க நாடகம்	0	5
வாலிபவான் சண்டை இராவணன் உற்பத்தி நாடகம்	0	5

எமது விலாசம்:—

சி. வே. மீனாக்ஷிசுந்திர முதலியார்,

34. குண்டியப்ப நாய்க்கன் தெரு, சூளை மதராஸ்